# திருக்குறள் கீர்த்தனைகள்









இயற்றியவர்
கலாரட்ணா, கலாபூஷணம்
மஹாவித்வான்
யாழ்ப்பாணம், இணுவில்.

பிரம்மஸ்ரீ.மா.த.ந.வீரமணிஐயர்
MA-JP

அவர்கள்






வெளியீடு
வீரகிருஷ்ண வெளியீட்டகம்,
இணுவில் தெற்கு, இணுவில்,
சுன்னாகம்.
T.P: 021-2223924

உ
சிவமயம்

# திருக்குறள் கீர்த்தனைகள்





இயற்றியவர்
கலாரட்ணா, கலாபூஷணம்
மஹாவித்வான்
யாழ்ப்பாணம், இணுவில்.



**பிரம்மஸ்ரீ.மா.த.ந.வீரமணிஐயர்**
**MA-JP**
**அவர்கள்**


வெளியீடு
வீரகிருஷ்ண வெளியீட்டகம்,
இணுவில் தெற்கு, இணுவில்.
சுன்னாகம்.
T.P : 021 - 222 3924



பதிப்புரிமை : திருமதி. சு. வீரமணி ஐயர்
மஹாவித்வான்





வீரமணி ஐயாவின் ஆக்கங்களை வெளியிடுவோர் பதிப்புரிமையாளரின் அனுமதி பெற்றே வெளியிட வேண்டும். ஐயாவின் ஆக்கங்கள் யாவும் மேற்குறித்த பதில் வெளியீட்டகம் ஊடாக வெளியிடப்படும்.

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

நூலின் பெயர் : திருக்குறள் கீர்த்தனைகள்

நூல் ஆசிரியர் : மா.த.ந. வீரமணி ஐயர்

முதற் பதிப்பு : 2005

வெளியீடு : வீரகிருஷ்ண வெளியீட்டகம்,
இணுவில் தெற்கு,
இணுவில்.
சுன்னாகம்.

அச்சிட்டோர் : சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
இல. 183, பலாலி வீதி,
கோண்டாவில்.
தொ.பே.இல : 222 6722

பிரதிகள் : 750

பக்கங்கள் : 140

விலை : [redacted] /=

*லண்டன் பாரதிய வித்யா பவன் இசைவீணை ஆசிரியை*
*திருமதி. சிவசக்தி சிவனேசன்*

# முன்னுரை

உலக உயிர்களை எல்லாம் இசைவிக்கும் ஆற்றல் உடையது இசை. ஈழத்தமிழர் வரலாற்றிலே பல இசைப் பேரறிஞர்கள் தோன்றி மறைந்துள்ளனர். அவர்கள் எழுதிய அரும்பெரும் இசைச் சுவடிகளை சுவைத்த பாக்கியம் கறையான்களுக்கே கிடைத்துள்ளன. காலங்காலமாக தமிழிசைக் கலைஞர்கள் நம்மவர்களால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். இது ஜீரணிக்க முடியாத அப்பட்டமான உண்மை.

நான் பிறப்பதற்கு முன்பே 1956ல் தென்இந்திய இசைக் கலைஞர்களால் அடையாளங் காணப்பட்டு "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" பாடல் ஆசிரியன் என இசை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டும் என் குருநாதர் மகாவித்வான் யாழ்ப்பாணம் ந. வீரமணிஐயர் அவர்கள் கற்பகவல்லியின் பொற்பதங்களுள் சங்கமம் ஆகும் வரை ஈழத்தமிழர்கள் அவரின் மேன்மையை உணரவில்லை.

அவர் ஈழத்தமிழன்னை பெற்ற அருந்தவப் புதல்வர்களில் ஒருவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பூதவுடம்பை நீத்து புகழுடம்பு பெற்றுவிட்டார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

எனத் தமிழ்நாட்டின் புகழை திருவள்ளுவன் மேல் ஏற்றிப் பெருமிதம் கொண்டான் பாரதி. அந்த வள்ளுவனின் திருக்குறளின் கருப்பொருளை மிக அழகாகக் கீர்த்தனைகளாக்கித் தந்திருக்கிறார் என் குருநாதர். இக் கீர்த்தனைகள் அவரது இளமைப் பருவத்தில் இயற்றப்பட்டவை. இத் திருக்குறள் கீர்த்தனைகளைப் படிப்போர் இக் கீர்த்தனைகளின் பரிணாம வளர்ச்சியைக் காணலாம். ஆன்மீகம், பக்தி, தேசியம், சமுதாயம், தமிழ் எனப் பல முகங்கள் உள்ளதாக இவரது கீர்த்தனைகள் இருப்பது இவரது முழுமையைக் காட்டுகிறது. அவரது கீர்த்தனைகள் ஈழத்தமிழ் இசை உலகிற்கு ஒரு புதிய பாதையை உருவாக்கியுள்ளது. நாம் தாயகப் பற்று உள்ளவர்கள். ஆனால் தாய்மொழிப் பற்று இல்லாதவர்கள் என்றே நான் சொல்வேன். தமிழ்மொழிப் பற்று இருந்திருந்தால் அவர் போன்ற மாபெரும் கலைஞர்களை உதாசீனம் செய்திருக்கமாட்டோம். எனக்கு மனநிறைவைத் தருவது அவர் இறைபதம் சேர முன்பே அவர் எழுதிய பல்லாயிரக்கணக்கான இசைத்தேன் கவிதைகளில் இருந்து சில நூற்றையாவது வெளியிட்டேன் என்பதே.

அவரின் ஒவ்வொரு பாடல்களை வாசிக்கும் போதும் அந்த மெல்லிய மனித உள்ளத்தில் இத்தனை கவிதை வெள்ள ஊற்றுக்களா? அந்த மடிமீது இருந்தா நான் கற்றேன்? அந்தப் பாக்கியம் எனக்கு எப்படிக் கிடைத்தது? உடல் சிலிர்க்கிறது, உள்ளம் கசிகிறது, கண்ணீர் வழிகிறது, என்ன செய்வது? இழந்த பின்னர் தானே எமக்கு இழந்ததின் மகத்துவம் புரிகிறது. இனியாவது நாம் நல்லவற்றை நாடி இனம் காண்போம்.

இக் கீர்த்தனைத் தொகுப்பு படிப்போருக்கு நிறையவே கற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

# முன்னுரை

கர்நாடக இசை என்று குறிப்பிடப்படும் இன்றைய இசைப் பாரம்பரியம் தொன்மையான தமிழ் இசை மரபுகளில் இருந்து கிளர்ந்தெழுந்தமைக்குரிய பல்வேறு சான்றாதாரங்களைக் குறிப்பிட முடியும். சிறப்பாகப் பல்லவர் காலத்தில் எழுந்த சைவம் தழுவிய பக்தியும், இசையும் கலந்த தேவார திருவாசகங்களும், ஆழ்வார்களது பக்திப் பாசுரங்களும் கர்நாடக இசைக்குரிய பலம் பொருந்திய அடிக்கட்டுமானத்தை அமைத்துக் கொடுத்தன. அந்தத் தளத்திலிருந்து வளர்ச்சிபெற்ற தொல்சீர் இசை ஆங்கிலேயர் புலக்காட்சியில் கர்நாடக சங்கீதம் என்ற பெயரைப் பெற்றது. ஆனால் திருநெறிய இசையே அதன் ஆதிப் பெயராகும்.

தமிழகத்தில் வாழ்ந்த தியாகராஜசுவாமிகள் திருநெறிய இசை சார்ந்த கிருதிகளை பேச்சு தெலுங்கு மொழியில் எழுதியமையைத் தொடர்ந்து அந்த இசைக்கும் தெலுங்கு மொழிக்குமுள்ள தொடர்புகள் பலம் பெறத் தொடங்கின.

தெலுங்கு மொழியில் உள்ள கனதியான கீர்த்தனைகள் போன்று தமிழ் மொழியிலும், இசைக் கட்டுமானங்கள் விரவப் பெற்ற கனதியான கீர்த்தனைகளை எழுதிய அமரர் பாபநாசம்சிவன் அவர்களிடம் கற்றுத் தேறிய வீரமணி ஐயா அவர்கள் பல்லாயிரக்கணக்கான கீர்த்தனை வடிவங்களைத் தமிழ் மொழியிலே ஆக்கித் தந்துள்ளார். ஐயா அவர்களே தமிழ்மொழியில் மிக அதிகமான கீர்த்தனைகள் எழுதியவர் என்ற பெருமைக்குரியவர்.

திருக்குறள் கீர்த்தனைகள் ஐயா அவர்களின் கவித்துவ ஆற்றலையும், இசையாற்றலையும் புலப்படுத்தும் அழகியற் பரிமாணங்களைக் கொண்டது. திருக்குறளைப் புதியதொரு புலக்காட்சியிலே காண்பதற்கும் அனுபவிப்பதற்குமுரிய இசைத் தளத்தை அவர் உருவாக்கித் தந்துள்ளார். புலமை நிலையில் இது ஒரு தனித்துவம் மிக்க பயிற்சியாகின்றது.

***கலாநிதி. சபா. ஜெயராசா,***
***கல்வியியற் பேராசிரியர்,***
***யாழ். பல்கலைக்கழகம்.***

# அணிந்துரை

## *கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர், J.P*

## (Rtd) இந்து நாகரிகப் பேராசிரியர்

## யாழ் - பல்கலைக்கழகம்

## தலைவர் நியந்த்ரீ

யாழ்ப்பாணம், இணுவில் மகாவித்துவான் அமரர் பிரம்மஸ்ரீ.ந.வீரமணிஐயர் அவர்களது மற்றுமொரு கவிதைப் படைப்பாக "திருக்குறள் கீர்த்தனைகள்" என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளிவருவது இசையன்பர்களுக்கும் தமிழன்பர்களுக்கும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். அவரது துணைவியார் ஸ்ரீமதி சுசீலாதேவி வீரமணி ஐயர் அவர்களது அரிய முயற்சியின் பயனாய் தமது கணவரது அரிய படைப்புக்களை வெளிக்கொணரும் வீரகிருஷ்ண வெளியீட்டகத்தின் வெளியீடாக இந்நூல் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

மகாவித்துவானின் கவிதைப் புலமையை வெளிப்படுத்தும் இக் கவிதை நூலில் எண்பது குறள்களை மூலமாகக் கொண்ட கீர்த்தனைகள் உள்ளடங்கியுள்ளன. கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை ஆகிய அதிகாரங்களில் உள்ள குறள்கள் கூறும் சிந்தனைகளை மூலமாகக் கொண்டு இராகம், தாளம் ஆகிய இசைச் சிறப்புக்களுடன் கூடியதாக கீர்த்தனைகளை மகாவித்துவான் உருவாக்கியுள்ளார். மக்களது வாழ்வியல் விழுமியங்களைச் சிறப்பாக இக் கீர்த்தனைகள் எடுத்தியம்புகின்றன. மண்ணில் நல்ல வண்ணம் வாழ மக்களை இப்பாடல் ஆற்றுப்படுத்துகின்றன. இந்நூல் இசையுலகுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்.

இக்கவிதை நூலில் அடுத்து திருக்குறட்கும்மி, திருக்குறட் கோலாட்டம் ஆகியவற்றுடன் மகாவித்துவான் இனியதமிழ் மொழி மீது தாம் கொண்ட அளவற்ற பற்றினை வெளிப்படுத்தும் வகையில் பாடல்களை ஆக்கியுள்ளார். "தமிழின் சுவை" பற்றிப் பின்வரும் அடிகளில் விதந்து போற்றுகின்றார்.

என்னவென்றியம்பிடுவேன் - எங்கள்
        இன்பத்தமிழின் நன்மிகும் சுவையை
கம்பனின் கவியமுதை - அவனின்
        காவிய நயருசியை
பண்புறும் குறள் ரசத்தை - இன்னும்
        நண்ணில் நயம் தரும் நாலடியை (என்ன)
திருப்புகழ் அமிர்தமும்
        திருப்பண்களும் இன்னும்
திருவாசகத்திலும்
        தீந்தமிழ் இசையை (என்ன)

மகாவித்துவான் தமிழன்னை மீது கொண்ட அன்பையும், அபிமானத்தையும் இப்பாடல் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. மேலும் கவிதைமலர், தமிழ்தாயின் புகழ், வாழிய செந்தமிழ் போன்ற பாடல்கள் அவரது தமிழ்ப் புலமையையும், தேனினும் இனிய தமிழ்மொழியின் சீர்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. வாழிய செந்தமிழ் என்ற பாடல் எம் அனைவரது உள்ளங்களையும் உற்சாகமடையச் செய்கின்றன. மேலும் அன்புதான்தெய்வமடா, என்ற கவிதை இந்நூலுக்கு அணிசெய்கின்றன.

கடும்புயலென்றாலும் - நல்ல
இளம் தென்றலானாலும்
கொடும் காற்று நம்மையெல்லாம் - நிம்மதி
கொள்ளவே தான் விடாது

.......................................................................

கடமையிற் கருத்தில்லாற்கு - இந்த
குவலயம் நரகமடா
மடமை அதைப் போலொரு - கெட்ட
மனத் தொல்லையில்லையடா
சோம்பித் திரிவதற்கு - நாடும்
சோம்பல் மிகுந்தோரே
ஏங்கித் தவிப்பாரடா - இங்கே
இத்தொழில் மேற்கொள்ளினும்

.......................................................................

கடமை எனும் கண்ணால் - இன்பக்
கருத்தோடு நோக்கி விட்டால்
உடமையதாகிவிடும் - இன்பம்
உலகெங்கும் பரவும்

என்ற பாடல் வரிகள் வாழ்வின் நிம்மதிக்கு கடமையுணர்வு இன்றியமையாதது என்ற உண்மையை இளந்தலைமுறையினர்க்கும், எதிர்காலச் சந்ததியினர்க்கும் எடுத்துக் கூறுவதாக உள்ளன.

மற்றும் பின்னல், கோலாட்டம், கர்பர், கும்மி, கைக்கொட்டுக்களி, குறத்திக்கும்மி, குலவளம், பின்னல் கோலாட்டம், ஸுதாஸ்வயம்வரம், கனம் கிருஷ்ணையர் போன்ற பாடல்களும் இக்கவிதை நூலைச் சிறப்பிக்கின்றன. மகாவித்துவானின் கவிதை

வரிசையில் தேசிய ஒற்றுமைப் பாடல்கள், நாட்டுப்பற்றுப் பாடல்கள், நாட்டின் முன்னேற்றம் பற்றிய பாடல்கள், நாட்டுப்பற்றிற்கு உரியனவாக உள்ளன. அவரது திடசித்தம் என்ற பாடல் மனித விழுமிய சிந்தனைகளை உள்ளடக்கியதாக மனிதர்க்கு அரிய வழிகாட்டியாக உள்ளன.

வாழ்க்கைப் படகு கால ஆழியில் செல்லும் போது
வீழ்ந்த இடர்ப்புயலும் வீசியடிப்பதுண்டு
நாள் தவறாது நீயும் சன்மனச் சாந்திபெற
வாழ்த்தித் திடசித்தமாம் வழியறிந்து வாழ்வாய்

என ஆற்றுப்படுத்துகின்றது.

இசைத்துறையிலும், நடனத்துறையிலும், கவித்துவத்திலும் ஆற்றல் மிகு மகாவித்துவான் அமரர் வீரமணி ஐயரின் இக் கவிதைத் தொகுப்பு நூல் திருக்குறளின் மேன்மையையும், செந்தமிழின் சிறப்பையும், மனித விழுமியங்களையும், திடசித்தத்தையும் மனநிம்மதியையும், கடமையுணர்வையும் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வரிய கவிதை நூலினை தமிழ் உலகு இனிதே உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

தமது கணவரது அரிய படைப்புக்களை வெளிக்கொணர்வதில் ஆர்வமுடன் செயற்படும் ஸ்ரீமதி சுசீலாதேவி வீரமணி ஐயரின் இத்தகைய வெளியீட்டுப்பணி மேன்மேலும் சிறக்க இணுவையம்பதி ஸ்ரீபரராஜசேகர விநாயகப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக! என வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணம் — ***கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணஐயர்***
05.01.2005

# கோதாவரிப்பட்டர் குடும்பம் சதாசிவக் குருக்கள் அண்ணாசாமி ஐயர் அவர்களின் ஆசியுரை

மகாவித்துவானை பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் 20ம், 21ம் நூற்றாண்டு சுமார் 45 ஆண்டு காலம் தமது திறமையை வெளிப்படுத்தி கலங்கரை ஒளியாக பெருமைக்கு வித்தாக இணுவிலை பிறப்பிடமாக்கி உயர் மரபை வகுத்துக் கொண்டார். கலாசேஷத்திரம் சென்று இந்திய அறிஞர்களால் கவிபாடும் திறன் பெற்று சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலின் கற்பகாம்பாளை தன் தமிழிசைக்குக் கற்பக தருவாகக் கொண்டு மயிலைக் குறவஞ்சியின் பொற்பதங்கள் பிடித்தேன் என்பது ஐயர் அவர்களின் கவியுலகப் பணிக்கு காப்பு செய்யுளாக அமைத்து, கற்பகாம்பாளே ஐயாவுக்கு கவிகள் பொழிவதற்கு கற்பக விருஷமாகி ஆசு கவியாகத் திகழ வழிசமைத்தாள். கீர்த்தனைகளை அமைத்து பிரபல்ய மாணவர்களது குரலில் ஒலிப்பேழைகளாக வெளியிட்டு வரும் பெருமை கலையுலகில் ஒரு மங்காப்புகழ் பெற்ற மகாமேதையானார். மயிலைக் கற்பகாம்பாள் மீது அளவு கடந்த பக்தியின் பயனாக 72 மேளகர்த்தராக திருமயிலைக் கற்பகாம்பாள் கீர்த்தனைகள் 35 தாள திருமயிலைக் கீர்த்தனைகள் சிறப்புடையன. இதனால் ஈழநாடு பெருமைபெற்றது. கீர்த்தனைகள், குறவஞ்சிகள், இசை அமைக்கும் சிறப்பு, சொல்லடுக்கு, தமிழ் மிடுக்கு இவருக்குரிய தனியான முத்திரை சமஸ்கிருத மொழியில் தமிழ் சிறப்புப் பெறும் சாகித்திய மாமணி, சிருஷ்டி ஞாயிறு அருட்கலைவாரிதி போன்ற பல கௌரவப் பட்டங்கள் பெற்றார்.

இத்தனை சிறப்பான இவரது பெருமைக்கு சரிநிகரா கருக்மணி அம்பாள் சுகவாழ்க்கையை சிறப்படைய வைத்தார். ருக்கி என்று சொல்லிப் பெருமைப்பட்டார். இருவரும் கண்ணியமாக வாழ்ந்தார்கள். வீரமணி ஐயர் அவர்கள் பல்லைக்கழக அதிதி விரிவுரையாளராகவும், பல்கலைக்கழக முதுதத்துவமானியாகவும், சமாதான நீதவனாகவும் கௌரவிக்கப்பட்டும் பல்கலைக்கழக அதிதி விரிவுரையாளராகவும் இருந்து மாணவ உலகுக்கு அளப்பரிய சேவை செய்தும் பாடசாலைக் கீதங்களை ஆக்கிக் கொடுத்தும் தனித்துவமான சிறப்பைப் பெற்றார்.

யாழ் நல்லூர் சிவன் கோயிலில் ஆரம்பிக்கப்பட்ட நியந்திரி தியானத்தையும் ஆக்கி ஆஸ்தானவித்துவானாகவும் திகழ்ந்தார். அங்கு இடம்பெற்ற சுவாசினி குமரிபூஜையில் எல்லோருக்கும் ஆசி வழங்கிய நிகழ்வு மனமுருக வைத்தது.

மாமேதை மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா அவர்கள் கற்பகாம்பாளின் திருவடிகளை நீங்காதுறைந்து என்றும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவரது ஆத்மா அமைதியுற எல்லாம் வல்ல கற்பகாம்பாளின் திருவடித் தாமரைகளைத் துதிப்போம் யாம். சாந்தி. சாந்தி.

# பணிந்துரை

*இசைப்பேரறிஞர் நாதபிரும்மம்,*
*கலைமாமணி, குன்னக்குடி வைத்தியநாதன்,*
*செயலாளர்,*
*தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை.*

தெய்வீக அவதாரமான மகாவிஷ்ணு இந்த உலகத்தை மூன்று அடிகளில் அளந்தான். தெய்வீகப் பிறவியான வள்ளுவன் நமது தமிழ் என்னும் மாபெரும் மொழியின் மூலமாக இரண்டே அடிகளில் சிறப்பு நீதிகளை உலகிற்கு அளித்துவிட்டான். இதை நன்றாகத் தெரிந்துகொண்டு, புரிந்துகொண்டு, வரிந்து கட்டிக்கொண்டு அந்த இரண்டடிக் குறள்களின் கருத்துக்களைத் தீந்தமிழ்க் கீர்த்தனைகளாக ஒரே அடியில் தெரிவித்துவிட்ட அந்த தெய்வீக இசை ஆசான் யார் தெரியுமா? அவர் தான் "திருக்குறள் கீர்த்தனைகள்" என்ற நூலை உருவாக்கப் பல நாட்கள் நித்திரையின்றி விழித்திருந்து முத்திரை பதித்துப் போய்விட்ட ஆசான் கலாரட்ணா கலாபூஷணம் மஹாவித்வான் யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ.மா.த.ந.வீரமணி ஐயர், எம்.ஏ-ஜே.பி அவர்கள்.

திருக்குறளுக்கு எத்தனையோ தெளிவுரைகளை மேலான பெரியோர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். கருத்துரையாகவும், கட்டுரையாகவும், குறளுக்குச் சிறப்பு வியாக்கியானங்கள் செய்திருக்கின்றார்கள். ஆனால் இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்து, நாம் சுவைக்கத் தக்கவாறு அந்தத் திருக்குறள்களை மனத்தில் நிலைக்க வைப்பதற்காகப் பாடலாக ஆக்கித் தமிழ் உலகிற்குத் தருவது என்பது பெரும்பாடு.

உதாரணமாக "திருக்குறள் கீர்த்தனைகள்" நூலின் முதல் பாடலையே எடுத்துக்கொள்ளலாமே. "அகர முதல எழுத்தெல்லாம்

ஆதி பகவன் முதற்றே உலகு" என்பது முதல் குறள். இது என்ன சாதாரணமான வாக்கியமா? இதைப் பாடலில் சிலாக்கியமாகச் சொல்வது என்றால் சரியான வாக்கேயக்காரரான வீரமணி ஐயர் அவர்கள் இந்த முதல் குறளுக்கே முத்தமிழ் அமுதத்தின் மூலமாக முத்து முத்தாக இந்தப் பாடலை எழுதி சித்து விளையாடி இருக்கிறார். அது எங்ஙனம் என்று கேட்கிறீர்களா? அதிகாலையில் நாம் எழுந்து அன்றாடம் நடக்கவிருக்கும் நல்ல காரியங்கள் செவ்வனே நடந்து நிறைவேறுவதற்கென்று இசைப்பதற்காக ஒரு இராகம் உண்டு. அந்த இராகம் தானே பூபாளம். அந்த பூபாள இராகத்தில் இம் முதல் குறளை அவர் வடிவமைத்திருக்கிறாரே! ஆஹா! என்ன ஒரு திறமையும், என்ன ஒரு அழகும், என்ன ஒரு சொற்சிறப்பும், நம் சிந்தனையை நிரப்பும் அளவுக்கு - வானளாவப் புகழும் அளவுக்குத் தேன் அமுதாகத் தந்திருக்கிறார்! வானவர்களில் ஒருவராகப் போய்ச் சேர்ந்த அமரர் வீரமணி ஐயர் அவர்கள் என்றென்றும் இந்த உலகத்தில் இருக்கும் மக்களின் மனங்களில் நிலைத்து நிற்பார் என்பதில் ஐயமில்லை.

முதல் அதிகாரம் அறத்துப்பால் என்ற காரணத்தால் பல்லவியில் கடவுளை வாழ்த்திடுவோம் என்று ஆரம்பித்த கவிஞன் அனுபல்லவியில் அவர் கரம்கொண்டு எழுதிய பேனா "அகரம்" என்று முதல் எழுத்தையே அமைத்து, அனைத்தும் அவன் அருள்தான் - அவன் அருளன்றி ஏதுமில்லை என்பதை ஓதி உணர்த்த எளிமையான தமிழில் பழமையான குறளை வளமையாகத் தந்து மலையென உயர்ந்து நிற்கிறார் அந்த மாமனிதர் வீரமணி பாகவதர். அந்த அனுபல்லவி என்ன என்று பார்ப்போமா? "அகரம்" முதல் எழுத்தாய் அமைந்ததைப் போல அனைத்துக்கும் மூலமான ஆண்டவனாகிய கடவுளை வாழ்த்திடுவோம் என்று பல்லவிக்கு வந்திருக்கிறாரே! அப்படிப்பட்ட அந்த இசைக் கடலை, அந்தக் கடலில் திளைத்த கலைஞனை நாம் வாயார வாழ்த்தி வரங்களைப் பெறவேண்டுமல்லவா? அவர்தம் உள்ளம் குளிர வேண்டுமென்றால் அவருடைய நேசத்தை, அவருடைய பாசத்தை, அனைத்து இசைக்

கலைஞர்களிடமும் ஒரு குழந்தை போல் பழகும் சுபாவத்தை நாம் கைக்கொள்ள வேண்டாமா? இசைக் கலைகளில் கீர்த்திமிகு வல்லவராக வாழ்ந்து, நமக்கெல்லாம் மூர்த்திகரமாக இருந்து, நம்முள்ளே வாழ்ந்திருக்கும் அப்பெருமகனை நினைக்கும் போது தோன்றியது என்ன தெரியுமா? அந்த வல்லவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கிறோமே என்ற எண்ணம் தான் மனத்தில் பிரதிபலிக்கிறது.

திருக்குறளைப் பாடலாக அமைப்பது சாதாரணமான விஷயம் அல்ல. எளிதில் சாத்தியமான விஷயமும் அல்ல. அந்த வள்ளுவனுக்கே இவர் பாத்தியப்பட்டிருப்பார் போலிருக்கிறது. அதன் காரணமாகத் தான் திருக்குறளாக நமக்குக் கிடைத்த போதனைகளை இசைப் பாடல்கள் மூலமாகச் சாதனைகளாக்கித் தந்திருக்கிறார் அவர். சத்து, சித்து,ளளள ஆனந்தம் என்று சொல்லக்கூடிய வார்த்தைகளின் மொத்த உருவான சித்த புருஷனாக உலகத்தாரால் போற்றப்படக்கூடிய ஒரு உதாரணமான இசை மகரிஷியாகக் காட்சியளிக்கும் இவரை, நமக்குக் கிடைத்த பொக்கிஷமாக நினைக்க வேண்டும். பல காலங்கள் கடந்தாலும் இந்த காவியப் புருஷனை யாராலும் மறக்க இயலாது.

அடியேனைப் பற்றி ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இவரின் அறிவுத்திறனைக் கண்டு பிரமித்துப் போனவர்களில் நானும் ஒருவன். என்னைப் பற்றி அவர் பேசும்போதெல்லாம் அவர் விதந்துரைக்கும் புகழ்வார்த்தைகள் என்னை நாணச் செய்யும், அந்த வார்த்தைகளைத் திருப்பிச் சொல்வதற்கு நா கூசும். பொதுவாக அந்த மாமனிதரைப் பற்றி சொல்வது என்றால் உலகில் உள்ள அனைத்து இசைக் கலைஞர்களையும் ஒட்டுமொத்தமாக இணைத்துப் பார்க்கும் இவர் தம் செயலுக்குப் புகழஞ்சலி செலுத்திக்கோண்டே இருப்பர். வாழ்க அவர்தம் நாமம்! வளர்க அவர்தம் புகழ்! தமிழ் வாழ்க! இசை வாழ்க!

# செஞ்சொற் செல்வரின்

# பிரார்த்தனையுரை

தமிழர்களின் தன்னிகரற்ற சொத்து திருக்குறள். உலக மொழிகளால் உன்னத நூல் என மொழி பெயர்க்கப்பட்டு அரியாசனம் அருகே அமரும் பேறுபெற்ற நூல் திருக்குறள். திருக்குறளின் அருஞ் சொற்களால் கருப்பொருளை உவமைப்படுத்த பயன்படுத்தாதவர்கள் இல்லை. எங்கள் மண்ணில் உதித்த எழில் ஞாயிறு, மகாவித்துவான் வீரமணி ஐயா அவர்கள் இசையோடு குறள் கூறும் கருத்தினை குவலயம் அனுபவிக்கலாம் என்பதனை இந்நூலூடாக எடுத்துரைத்துள்ளார். "திருக்குறள் கீர்த்தனைகள்" என்ற இவ்வரிய நூல் வீரமணி ஐயாவின் ஆற்றலின் உச்ச வெளிப்பாடாக அமைந்துள்ளது. பல்லாயிரம் பாக்களை யாத்த பயன்தரு கற்பக விருட்சமான வீரமணி ஐயா அவர்களின் சாதுர்யத்தை மெச்சாத அறிஞர்கள் இல்லை. ஐயா அவர்களின் முதலாவது நினைவுப் பேருரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. அவ்வுரையை ஆற்றிய வாழ்நாட் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் வீரமணி ஐயா அவர்களின் ஆற்றலினை வியந்து குறிப்பிடுகையில் அபூர்வ பிறவியென்று எம் மண்ணில் பிறந்து தமிழைத் தன்னுணர்வுகளினால் குழைந்து குலாவி தானும் உணர்ச்சிவசப்பட்டு பிறரையும் உணர்ச்சிக்கு ஆட்படுத்திவிட்டு

நீங்கா நிலையில் இவ்வுலகிலிருந்து நீங்கிவிட்டார் எனக் குறிப்பிட்டார். உண்மையிலே வீரமணிஐயா அபூர்வ பிறவிதான். இப் பெருந்தகை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூவகை இன்பங்களை வள்ளுவன் வழியினூடாக இசையோடு இவ்வுலகம் அனுபவிக்க வாய்ப்புத் தந்துள்ளார். குறள் முப்பாலை உலகத்திற்குத் தந்தது வீரமணி ஐயரின் திருக்குறள் கீர்த்தனைகள். நான்காவது நிலையாகிய வீடுபேற்றின்பத்தினையும் தரவல்லது என்பதில் ஐயமில்லை. வீரமணி ஐயாவின் பிரியபத்தினி திருமதி. வீரமணிஐயா அவர்கள் உலகுக்குகந்த உன்னத பணியை இந்நூல் வெளியீடுகள் மூலம் செய்துவருவது என்றும் நன்றிக்குரியது. ஐயாவின் உடலைக் காத்த அம்மா இன்று அவர் உயிராக நேசித்த படைப்புக்களைக் காத்துவருவது உத்தமத் தொண்டாகும்.

ஐயா அவர்களின் படைப்புக்கள் இப்பாரில் என்றும் நிலைத்து நிற்க இறைவனை இறைஞ்சி என் பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

*திரு. ஆறு திருமுருகன்*

*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்*
*ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த*
*பரமாச்சாரிய சுவாமிகள்*
*வழங்கிய*

# வாழ்த்துச் செய்தி

ஈழத்திருநாடு செய்த தவப்பலனால் உதித்தவர் மகாவித்துவான் வீரமணி ஐயர் அவர்கள். இறையருள் நிறைந்த மேதாவியான இவர் படைத்த திருக்குறள் கீர்த்தனைகள் நாலுருப் பெறுவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். அறம் கூறும் குறள் நெறியை அருள் இசைப் பாடலாக ஆக்கிய வீரமணிஐயர் என்றும் பாராட்டுக்குரியவர். எங்கள் ஆதீனத்தோடு மிக நீண்டகாலத் தொடர்புடையவர் இவர். இவரது பிரியபத்தினி திருமதி. வீரமணி ஐயர் அவர்களின் பதிப்பித்தல் பணி மிகவும் பாராட்டுக்குரியது. இல்லற தர்மத்தின் குறிக்கோளைப் பேணுகின்ற அம்மையாரை நன்றியோடு எமது சமூகம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளது. எமது நாட்டுக் கலைஞர்கள் எமது படைப்பாளிகளின் பாக்களை தமது கச்சேரிகளில் கூடுதலாகப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக வீரமணி ஐயாவின் பாடல்கள் சாகித்திய நெறிமுறையில் எழுதப்பட்டவை. ஐயா அவர்களின் அரிய படைப்புகள் தொடர்ந்து நாலுருவம் பெற வேண்டும். அப்பணியில் பெரிதும் உழைக்கும் அம்மையாரை வாழ்த்தி ஆசிகூறி அமைகிறோம்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்

*சுவாமிகள்*

# வாழ்த்துரை

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ. ந. வீரமணிஐயர் எங்களுடைய நாடறிந்த கலாவித்தகர். எங்கள் நாட்டு எல்லைகளுக்கு அப்பாலும் அவருடைய பெரும்புகழ் பரவியுள்ளது. ஐயா அவர்களுடைய ஆளுமையினையும் சிறந்த திறமையினையும் அவர் இல்லா இவ்வேளையிலேயே நன்கு உணருகின்றோம். அவருடைய சாகித்தியங்களுக்குக் கிடைத்த உலகப் புகழ் எங்களுக்குப் பெருமை உணர்வினை ஊட்டுகின்றது. வள்ளுவனுடைய திருக்குறளிலிருந்து எண்பது குறள்களைத் தெரிந்தெடுத்து அவற்றின் பொருளை அடிப்படையாகக் கொண்டு கீர்த்தனைகள் பாடியுள்ளார். அவற்றுடன் வேறு பல கீர்த்தனைகளுடன் திருக்குறள் கீர்த்தனைகள் என்னும் இந்நூல் வெளிவருகின்றது.

ஒவ்வொரு குறளின் பொருளையும் அடிப்படையாகக் கொண்டு கீர்த்தனை இயற்றப்பட்டுள்ளது. எல்லாமாக 78 இராகங்களிலே இக்கீர்த்தனைகள் அமைக்கப்பட்டுள்ளன. 47ஆம் 57ஆம் பாடல்கள் கேதாரகௌளையிலும் 46ஆம் 62ஆம் பாடல்கள் கமாஸ் இராகத்திலும் அமைந்துள்ளன. ஏனையவை வெவ்வேறு இராகங்களிலே இயற்றப்பட்டுள்ளன. முதற் குறளாகிய "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்பதைக் கடவுள் வாழ்த்தாகக் கொண்டு,

"கடவுளை வாழத்திடுவோம் - எங்கள்
இடரினைப் போக்கி இன்பமளிக்கும் தூய - கடவுளை"

எனப் பூபாள இராகத்திலே கீர்த்தனையை அமைக்கிறார். இவ்வாறு அன்பு, அறம், தெய்வீகம் என்னும் பொருள்களை

அடிப்படையாகக் கொண்ட மனித விழுமியங்களை உணர்த்தும் கீர்த்தனைகள் இந்நூலிலே இடம்பெறுகின்றன.

திருக்குறட் கருத்துக்களைக் கீர்த்தனைகளிலே மட்டுமன்றி வேறு சிறு பிரபந்தங்களிலும் பாடியுள்ளார். திருக்குறட் கும்மியும், திருக்குறட் கோலாட்டமும் மஹாவித்துவான் வீரமணி ஐயாவினாலே பாடப்பட்டுள்ளன. கும்மியிலே கடவுள் வாழ்த்துப் பத்துக் குறட் கருத்துக்களும் பத்துக் கும்மிப் பாடல்களாக அமைக்கப்பட்டுள்ளன. வான்சிறப்பு அதிகாரக் குறட் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு,

"வான்சிறப்பைப் போற்றி நாமும் கோல்கள் ஆடுவோம்
வள்ளுவனார் திருக்குறள் சொல் பாடிடுவோமே"

என்று கோலாட்டப் பாடல்களை அமைக்கின்றார். கும்மி ஆனந்தபைரவி இராகத்திலும் கோலாட்டம் பெஹாக் இராகத்திலும் இயற்றப்பட்டுள்ளன.

சில கீர்த்தனைகளிலே தமிழ்மொழி சிறப்பித்துப் பாடப்படுகின்றது. அவர் ஒரு தமிழ் மலர் மாலை கட்டுகிறார். அம்மாலை எவ்வாறு அமைகின்றதெனப் பின்வருமாறு கூறுகிறார்.

"இலக்கிய மணமலர் இலங்கிக் கமழவும்
இதிகாசம் புதுமலர் இடையிடை யேவர
மதிமிகும் விஞ்ஞானப்பூ மனம்மகிழ வைத்தே
துதிதரும் பக்தியைத் துலங்கிடக் கட்டியே".

தமிழ் இலக்கியங்களிலேயுள்ள பல்வேறு சந்தங்களையெல்லாம் வீரமணி ஐயா பரிசோதனை செய்து பார்க்கிறார். அருணகிரிநாதருடைய திருப்புகழ்ச் சந்தமொன்றினைக் கும்மியிலே அமைத்துப் பாடுகிறார்.

சீர்சிறக்குமேனிப சேல்பசேல் என
நூபுரத்தின் ஓசை கலீர் கலீரென
சேரவிட்ட தாள்கள் செவேல் செவேலென
- வருமானார்

என்று தொடங்கி கும்மிப் பாடல்கள் அருமையான அச்சந்தத்திலே அமைக்கப்பட்டுள்ளன. நூலின் முடிவிலே தேசிய ஒற்றுமை பற்றியும் சில பாடல்கள் இடம்பெறுகின்றன.

தொகுத்துநோக்குமிடத்து, மஹாவித்துவான் வீரமணி ஐயாவினுடைய கவித்துவமும், இசைநடனப் புலமையும் இந்நூலினூடாகப் புலப்படுகின்றன என்று கூறலாம். அவருடைய நினைவினை எங்கள் மனத்திலே தேக்கி வைக்க இந்நூல் உதவுமென நம்புகிறேன். இந்நூலுக்கு இவ்வாழ்த்துரையை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கலைஞனாகவே வாழ்ந்து சென்ற அப்பெருமகனை நினைக்கும் போதெல்லாம் கலையுணர்வு எம்முள்ளத்திலே ஊறுவதை உணர்கிறேன். அவருடனான தொடர்பு ஓர் இனிய தொடர்பு. இந்நூல் அப் பெருமனுடைய இனிய கலை உள்ளத்தை மகிழ்விக்குமென எண்ணுகிறேன்.

*பேராசிரியர். அ. சண்முகதாஸ்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# இசையோடு இயைந்த நெகிழ்ச்சிப் பாடல்கள்

*திரை இசைப் பாடகர்,*
*கலைமாமணி. பத்மஸ்ரீ டாக்டர். டி.எம். சௌந்தரராசன்,*
*முன்னாள் தலைவர்,*
*தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை.*

எனது ஆருயிர் நண்பர், கலாரத்னா, கலாபூஷணம், மகாவித்வான் யாழ்ப்பாணம், இணுவில் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் எம்.ஏ.,ஜே.பி., அவர்கள் எழுதியுள்ள "திருக்குறள் கீர்த்தனைகள்" என்ற நூலை, வீரகிருஷ்ண வெளியீட்டகம் வெளியிட்டுப் பெருமைப்படுத்த முன் வந்துள்ளது.

என் நண்பர் வீரமணி ஐயர் நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதியுள்ளார். அவற்றுள் மிகச் சிறந்ததும் என்னால் பாடப்பெற்றதுமான "கற்பகவல்லி நின்பொற்பதங்கள்" மூலமாக உலகப் பிரசித்தியை அவர் பெற்றுள்ளார் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இவர் எழுதியுள்ள "திருக்குறள் கீர்த்தனைகள்" நூலின் பெருமையை எடுத்துச் சொல்ல அடியேன் முன் வந்துள்ளேன். இந்நூலில் கண்டுள்ள அபூர்வமான கற்பனைகள் பாடல்களின் தன்மையும் கருத்தும் மாறாமல் நியாயப்படுத்தி எழுதும் திறமை

முதலானவை இவருக்கே மட்டும் தான் உண்டு. இவரின் பாடல்களைப் படிக்கும் பொழுது உணர்ச்சிப் பெருக்கால் பெரிதும் நெகிழ்ந்து விடுகிறோம்.

திருக்குறள் கீர்த்தனைகளில் அறத்துப்பால் வரிசையில் எட்டு அதிகாரத் தலைப்புகளில் அதாவது கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல், அன்புடைமை ஆகியவற்றில் எண்பது குறள்களுக்குப் புதுமையான முறையில் கருத்துகள் மாறாமல் இசையோடு இயைந்த பாடல்களாக எழுதியுள்ளார். இதுகாறும் பல புலவர்கள் கருத்துரை, பதிவுரை என்றெல்லாம் எழுதியிருந்தாலும் மிகச் சுலபமான முறையில் எளிமையாகப் பொருளைப் புரிந்துகொள்ளும் வகையில் தனித் தமிழ்ப் பாடல்களாக விளங்கியிருப்பது தமிழ்நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இதோடு மட்டுமல்லாமல், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, அதிகாரக் கருத்துக்களைத் திருக்குறள் கும்மி, திருக்குறள் கோலாட்டம் என்றெல்லாம் இரத்தினச் சுருக்கமாக விளக்கியுள்ளார். மேலும் வாழிய செந்தமிழ்க் கவிதை மலர்த் தொகுப்பு, தமிழ்மலர்மாலை, தமிழ்மொழி, தமிழ்த் தாயின் புகழ், தமிழின் சுவை, கவிதைக்கன்னி, வீரத்தமிழ் மகன், வாழ்க்கையில் வெற்றி, வாழிய செந்தமிழ் என்றெல்லாம் பலவிதமான பாடல்களையும் பழமைப் பாடல்களைப் போற்றும் படியும் இவர் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழ் இசை உலகுக்கு மேலும் தொண்டாற்ற வேண்டிய இவர் எதிர்பாராமல் மறைந்தது இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் மட்டுமல்லாமல் தமிழ் மக்கள் வாழும் அனைத்து உலகுக்கும் பேரிழப்பாகும். தமிழ்க் கலை உலகம் மட்டுமல்லாது தமிழ்ப் பேரன்பு மக்கள் எல்லாம் கூட இவருடைய ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யவேண்டும்.

சங்கீதத்தைத் தொழிலாகக் கொண்ட கலையன்பர்கள் சிறப்புமிக்க இந்நூலை வாங்கி, இதிலுள்ள பாடல்களைப் பாடி, திருக்குறளின் பெருமையை அனைவரும் உணருமாறு செய்யலாம். தாங்களும் அனுபவித்தும் பாடிப் பெருமையுறலாம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூல் குறித்த அடியேனின் கருத்தைப் பெற்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கும் முயற்சிகளை மேற்கொண்ட உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளர் இரா. மதிவாணன் அவர்களுக்கும், இதனை வெளியிட முன்வந்துள்ள வீரகிருஷ்ண வெளியீட்டாளருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இசைப் பேரரசர் வீரமணியார் புகழ் வளர்க!

*உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன்.*

*எம்.எஸ்.சி., பொதுச் செயலாளர்,*

*உலகத் தமிழர் மையம்,*

*சென்னை.*

## விநாயகர் சமூக சேவையின்

தாழ்மொழியான தமிழுக்கு வளப்பத்தையும் வாழ்வாங்கு புகழையும் தந்துள்ள நற்றமிழ் அறிஞர்களையும், நல்லிசை வாணர்களையும் உருவாக்கித் தந்த புகழுக்குரிய நகரே தமிழ் ஈழத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம். அத்தகைய யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தலைவரான சிந்தனைச் செல்வர் எஸ்.வி.ஆறுமுகசாமி J.P அவர்கள் அண்மையில் தமிழகத்துக்கு வருகைதந்த போது, உலகத் தமிழர் மைய அலுவலகத்துக்கு வந்து என்னைச் சந்தித்தார்கள். நீண்ட அளவளாவுதலுக்கும், கருத்துப் பரிமாற்றங்களுக்கும் பிறகு, காலஞ்சென்ற இசைப் பேரறிஞர் பிரம்மஸ்ரீ.மா.த.ந.வீரமணி ஐயா அவர்களின் துணைவியார் தந்தனுப்பிய மடலை என்னிடம் தந்தார்கள். வீரமணி ஐயா அவர்களின் முதலாண்டு நினைவு நாளில் அவரது "திருக்குறள் கீர்த்தனைகள்" என்னும் நூலை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் குறிப்பிட்டு தமிழக அறிஞர்கள் சிலரிடமிருந்து அதற்கு அணிந்துரை வாங்கி அனுப்புமாறும் அம்மடலில் அவர் அறிவித்திருந்தார்.

இந்த இசைப் பேரறிஞருக்கும் எனக்கும் ஓரிரண்டாண்டுகளாகத்தான் அறிமுகமும், நட்புறவும் மலர்ந்தன. என்றாலும் நீண்டகாலம் பழகிய ஒரு நெஞ்சப் பிணைப்போடுதான் நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வந்தோம்.

அன்னாரின் முதலாண்டு நினைவு நாளில் அவர் எழுதிச் சென்ற "திருக்குறள் கீர்த்தனைகள்" நூலை வெளியிட்டு அவருடைய புகழுக்கு மேலும் புத்துணர்ச்சியூட்டிட முன்வந்திருக்கும் அவரது துணைவியாரையும், உடன் பணியாற்றும் பெருமக்களையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

மனிதநேயம் மிக்க ஐயா வீரமணி அவர்களின் படைப்புகள் கூர்மையானவை. கட்டுக்கோப்பான, செறிவார்ந்த, செம்மாந்த புலமை மிக்கவை. உண்மையின் ஒளிபொருந்தியவை. சிந்திக்கத் தூண்டுபவை. சொல்லிலும் செயலிலும் மாறுபாடு இல்லாமல், வெளிப்படையாகச் செயலாற்றி வந்த செயல் மறவர் அவர்.

இசைத்துறையின் முன்னோடியாகத் திகழ்கிற அவரது "திருக்குறள் கீர்த்தனைகள்" நூல் முழுவதும் இசையுணர்வு பரந்துகிடப்பதைக் கண்டு மகிழலாம். வேறொருவரும் செய்யாத புதுமையான முயற்சி இது. திருக்குறளின் கருத்துக்களை எளிய சொற்களில் இசை நயத்துடன் மக்கள் மனங்களில் பதியச் செய்யும் முன் முயற்சியிலும் அவர் வெற்றி பெற்றுள்ளார். தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு மட்டுமல்லாமல் தமிழிசை விரும்பிகளுக்கும் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டும் வகையில் இந்நூல் வெளிவந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

திருக்குறளின் அறத்துப்பால் பகுதியிலிருந்து 80 குறள்களுக்கு மட்டுமான கீர்த்தனைகளை இந்நூல் கொண்டுள்ளது. இயற்கை அன்னை அவரைத் தன்னோடு அரவணைத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால், எஞ்சிய அனைத்துக் குறள்களுக்குமான கீர்த்தனைகள் அவர் மூலமாக நமக்குக் கிடைத்திருக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள இசைவாணர்கள் மட்டுமல்லாது, தமிழகத்திலும் பிற நாடுகளிலுமுள்ள இசைவாணர்களும் வீரமணியாரின் திருக்குறள் கீர்த்தனைகளை இசையோடு பாடித் தமிழர்களை மகிழ்விக்கவும். திருக்குறளைப் பரப்பவும் முன்வர வேண்டும்.

வளர்க வீரமணியார் புகழ்!

# சீர்திரு வளர்த்த கீர்த்தனைச் சிறப்பு

*முன்னாள் துணைவேந்தர்*
*டாக்டர். ஔவை நடராசன்*

ஏழ்பனை நாடு என்பதே யாழ்ப்பாணம் ஆயிற்று. எனினும் யாழ்ப்பாணப் பெயருக்கு இன்றைய நிலைக்குப் பொருந்துமாறு சிறந்த இசைவாணர்களைத் தோற்றுவித்த பெருமையும் உண்டு. ஆடல் மகளின் மையல் வலைப்பட்ட இராசராச பாண்டியன் தன் அவைக்களத்துப் பாடினி பத்திரையைத் தோற்பிக்க எண்ணி, ஈழத்தினின்று ஒரு பாடினியை வரவழைத்த செய்தியைத் திருவிளையாடல் புராணத்துள் இசைவாதுவென்ற படலம் கூறும்.

இசை வளர்த்த ஈழம் சுன்னாகத்து இணுவில் இசைத்திலகம், வீரமணியாரைத் தோற்றுவித்த புகழுடையது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசை பயின்ற பெருந்தகை கலைத்திலகம் வீரமணியார் முதுகலை தேர்ந்து, தமிழை ஆழமாகப் பயின்றவர். யாப்புநெறி பிறழாமல் ஆசுகவிபாடும் தேசுடையவர்.

கலாபூஷணம், கலாரத்தினம், மகாவித்துவான் என்றெல்லாம் பாராட்டுக்குரிய தகுதிகளைப் பெற்ற இணுவில் வீரமணியார் கணுவின்றி நின்ற கரும்பாய்ப் பாடுபவர். இசைப் பேரொளி வீரமணி ஐயர் பல நூல்களையும் படைத்தவர். மயிலை கபாலீச்சரத்துக் கடவுளைப் பரவிப் பாடிய பாடல்கள் இசை நலம் பொது நலம் இலங்குபவை. கீர்த்தனை என்னும் யாப்பு 15ஆவது நூற்றாண்டுக்கு மேல் கருக்கொண்டு இசைத்தமிழின் ஒரு கிளையாக வளர்ந்தது.

தமிழ் யாப்பையே தெலுங்கு கன்னட கேரள மக்களும் தொடர்ந்து பயன்படுத்தினர். இசைப்படுத்திப் பாடும் இசை வல்லாருக்குக் கீர்த்தனைப் பாடல்கள் விரிந்த கற்பனைக்கு இடந்தரும். வகையளிக்கும் இடமின்றி அடியளவில் பொருள் முற்றுப்பெற்றுக் கீர்த்தனையில் இனிது விளங்கும். பொருள் நலம் இசைப்பாடல்களில் வல்லொற்றுச் சொற்கள் பெருகிவரின் ஓசையின்பம் நிறைவடையாது என்பர்.

இயல் இலக்கணத்துக்கு வேறாக இங்கு தந்த இலக்கணமே கைக்கொள்ளப் பெறுவதால், பண்ணும் பாணியும் செவியையும் சிந்தையையும் குளிர்விக்கும்.

இசைத்திலகம் இணுவிற்புலவர் வீரமணியார் பாடிய பாடல்கள் இத்தகைய இசை நலம் வாய்ந்தவை. ஈழத்தாருக்குத் தமிழ் மீது காதல் ஆழமுடையதாய் அமைந்ததை உலகம் நன்கறியும். இவர் பாடல்களிலும் அது பரக்கக் காணலாம்.

“ஆடிடுவேன் உன்புகழ்” என்னும் இந்நூற்பாடல் பாடுதற்கரிய நலம் வாய்ந்தது. சரணத்தில் வரும் வல்லொற்றுகள், அயலிருக்கும் மென்கண இடைக்கண எழுத்துக்களின் அரவணைப்பில் மெலிந்து இசைநயம் ஏற்றுகின்றன. “எத்தனை ஆயிரம் தான் கற்றபோதினும் அத்தனையும் நம் தமிழ் அன்னைக்கு நிகராமோ” என்ற வீரமணியார் பாட்டில் இசை வளமும் விம்முற்று மின்னுகிறது.

திருக்குறள் நீதிநூல், திருக்குறள் நூற்பாக்களைப் பலர் பாடுகிறார்கள். மாயூரம் விசுவநாத சாத்திரியார் முதலாகச் சிலர் பல்லாண்டுகளுக்கு முன்னர் கீர்த்தனை வடிவத்தில் திருக்குறளை அமைத்தனர்.

திருக்குறள்பாக்களை குறள் யாப்பில் அமைந்தவாறே பாடுவதைக் காட்டிலும் அவற்றின் கருத்தைக் கீர்த்தனையில் வடிவமைத்துப் பாடுவதே சிறப்பாகும். திருக்குறள் இயற்பாவாகத் திகழ்வதால் பண்ணும் பாயிணும் பொருந்தப்பாடுதற்கு அது அத்துணை உகந்ததா என்பது ஆராயத்தக்கது. இணுவிற்புலவர் வீரமணியார் திருக்குறட் கருத்துக்களைப் பாவடிவிற் புனைந்து கீர்த்தனையாக்கியுள்ளார்.

நீரில்லாமல் உலக நிலையமையாது
தண்ணீரது வான்மழை யின்றி வழங்காது

என்னும் கீர்த்தனையின் முதலடி "நீரின்றி அமையாது உலகெனின் யார் யார்ப்பும் வானின்றமையாது ஒழுக்கு" எனும் குறளை எத்துணை எளிதாக மாற்றித் தருகிறது! இவ்வடிகளில் அமையும் மூன்றாஞ்சீர்களில் வரும் மோனையும் யாது காது என்னும் இயைபுகளும் இசை நீர்மையைப் பேணுகின்றன.

குழலும் யாழும் இனிய தென்பார் - தமது
குழந்தைகளின் இன்பக்குதலைமொழி கேளாதார்

என்ற யமுனாகல்யாணி இராகத்துப் பல்லவியைப் பாடி மகிழலாம். மொழி கேளாதார் என்பது மூன்று மாத்திரையில் அடங்கிவரும் இன்பத்தைப் பாடி நுகர்வது பொருந்தும்.

இசைமாமணி வீரமணியார் இப்போது நம்மிடையே இல்லை. என்பால் பேரன்புகொண்டு பலமுறை நேரிலும் தொலைபேசியிலும் உரையாடி அவர் உருகியதை நினைந்து நெகிழ்கிறேன். இசைக் களஞ்சியமான வீரமணியார் விட்டுச்சென்ற எச்சம் காலமெல்லாம் இசைப் பாடல்களாக நிலை நின்று அவர் புகழ்பாடிக்கொண்டிருக்கும்.

திருக்குறள் கீர்த்தனைகள் என்ற இத்தொகுப்பில் முத்துத்தாண்டவர், இராமதாசர் பாடல்களும், இந்திப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பின்னர், கோலாட்டம், கும்மி முதலானவற்றுக்கு ஏற்ற சில பாடல்களும் சுரச்சதிகளும் இடம்பெற்றுள்ளன. இசை கலையரசர் வீரமணியார் பாடியும், கற்பித்தும் வந்த பாடல்கள் போலும்!

திருக்குறள் கீர்த்தனைகள் என்ற இத்தொகுப்பு இசைக்கலைஞர்கட்கு வாய்த்த ஒருபேறு. இப்பாடல்களை இசைவாணர்கள் தொடர்ந்து பாடித் தமிழுக்கும் திருக்குறளுக்கும் தொண்டு செய்வாராக!

கடந்த ஆண்டு கொழும்பு கம்பர் விழாவுக்கு நான் வந்திருந்தபோது என்னை ஆரத்தழுவி அடங்காத என் காதலை எவ்வாறு புலப்படுத்துவேன் என்றார். திடீரென ஒரு திங்களில் மறைந்தார்.

தமிழ் ததும்பும் உணர்வோடு அறிஞர்களை இணைக்கும் அன்பு தோய்ந்த பண்பாளர் திரு. மதிவாணன் இசைத்திலகத்தின் மறைவுக்காக உருகியதோடு, ஆசிரியரின் முந்தைய நூலுக்கும் என்னை அணிந்துரை எழுதவைத்தார். அவருடைய அன்பும் வலியுறுத்தலும் இப்போது இந்த அணிந்துரையை வரையுமாறு செய்தது. இசைப் பேரொளி வீரமணியார் புகழ் என்றும் நிலவுக.

## பண்ணிசைப் புலவர் வீரமணியார் புகழ் பல்லாண்டு வாழ்க!

*டாக்டர். புரட்சிதாசன்,*
*தலைவர்,*
*தமிழக எழுத்தாளர் சங்கம்.*

திருக்குறள் தலைப்பைக் கொண்டார்!
தெளிதமிழ் இசையைக் கொண்டார்!
கருத்ததைச் சொல்வதற்கோ!
கருவிகள் துணையைக் கொண்டார்!
நிறுத்தலில் இரக்கம் ஏற்றம்!
நெடில் குறில் சுரங்கம் ஆடும்,
பொருத்தலில் பொருளுக்கேற்ற;
பூச்சரம் பண்கள் கொண்டார்!

கடல்தொடும் இலங்கைத் தீவில்;
காப்பியம் யாழ்ப்பாணத்தில்;
படையென வீரம் தோய்ந்த
பாடகர் மணியார் செய்த
நடைத்தமிழ்ப் பாட்டும் கூத்தும்
நானிலம் சிறக்க வாழ்க!
இடம்பொருள் ஏவல் கொண்ட
எம்தமிழ் இசையே வாழ்க!

# நன்றியுரை

எங்கள் ஈழமண்ணின் முத்தமிழ் வித்தகராக மறைந்தும், மறையாது இன்றும் விளங்குபவர் அமரர் மகாவித்வான் பிரம்மஸ்ரீ.மா.த.ந. வீரமணிஐயர் அவர்கள். இசை நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்ட பெருமை இவருக்குண்டு. மற்றுமொரு சிறப்பான படைப்பாக "திருக்குறள் கீர்த்தனைகள்" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

திருவள்ளுவர் ஓர் உலக கவி. உலக கவிகளுள்ளும் தலைசிறந்த கவி. அவர் உள்ளத்தே தோன்றிய கருத்துக்கள் யாவும் உலக மக்கள் அனைவருடைய உள்ளங்களையும் கவரும் தன்மையுடையன. அத்தகைய இரு வரிகள் அடங்கிய குறளுக்கு மகுடம் வைத்தாற் போல் ஐயா திருக்குறளின் கருப்பொருளை மிக அழகாகக் கீர்த்தனைகளாக்கித் தந்திருக்கிறார். மிகவும் எளிதான சொற்களில், இசை நயத்துடன் மக்கள் மனங்களில் பதியும் வண்ணம் கீர்த்தனைகளை உருவாக்கியுள்ளார்.

இத்தகைய சிறப்பு மிக்க இந்நூலை, ஐயாவின் பேரன்புக்குரியவரும், ஆப்த நண்பரும் விநாயகர் சமூக சேவையின் தலைவருமான எஸ்.வி. ஆறுமுகசாமி, ஜே.பி. அவர்கள் அண்மையில் தமிழகம் செல்வது பற்றி அறிவிப்பதற்கு வந்திருந்தார். அப்போது அவரிடம் "திருக்குறள் கீர்த்தனைகள்" நூலைக் கையளித்து உலகத் தமிழர் மையம் சென்னை மதிவாணன் அவர்களிடம் சேர்ப்பித்து அவர் மூலம் தமிழக அறிஞர்களிடம் அணிந்துரை, வாழ்த்துரை போன்றன பெற்றுத் தருமாறு கொடுத்த கடிதத்தையும் கொண்டு சென்ற எஸ்.வி. ஆறுமுகசாமி அவர்கட்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐயாவிற்கும், மதிவாணனுக்கும் அறிமுகம் குறைவான காலமாக இருந்தாலும் அன்பு ஆழமானதாக இருந்திருக்கிறது. ஆதலால் தான் எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாது அறிஞர் பெருமக்களிடம் சென்று நூலைக் காண்பித்து அவர்களிடம் இருந்து அணிந்துரை, வாழ்த்துரை, பணிந்துரை போன்றவற்றைப் பெற்று "தொலைநகல்" மூலம் அனுப்பி வைத்த மதிவாணன் அவர்களுக்கும் நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஆசியுரைகள், முன்னுரை, வாழ்த்துரைகள், அணிந்துரை, பணிந்துரை, பிராத்தனையுரைகள், இதயபூர்வமாக வழங்கிய பெரியோர்களான நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள், கோதாவரிப் பட்டர் குடும்பம், சதாசிவக்குருக்கள், அண்ணாசாமி ஐயர் அவர்கள், லண்டன் பாரதீய வித்யாவன் இசை, வீணை ஆசிரியை திருமதி. சிவசக்தி சிவனேசன் அவர்கள், இந்து நாகரீகப் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம் (RTD) கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள், யாழ் பல்கலைக்கழகம் பட்டப்பின் படிப்பு, கலைப்பீடாதிபதி அ. சண்முகதாஸ் அவர்கள், கல்வியியல் பேராசிரியர் சபாஜெயராஜா அவர்கள், செஞ்சொற் செல்வர் திரு.ஆறுதிருமுருகன் அவர்கள், முன்னாள் தலைவர் தமிழ் நாடு இயல், இசை மன்றம், சென்னை பத்மசிறி டி.எம். சௌந்தரராஜன் அவர்கள், முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஒளவை நடராஜன் அவர்கள், செயலாளர் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் சென்னை கலைமாமணி, குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், பொதுச் செயலாளர் உலகத் தமிழர் மையம், சென்னை உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்கள் ஆகியோருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளும் வணக்கங்களும் உரித்தாகட்டும்.

மஹாவித்வான் வீரமணிஐயர் அவர்களுடைய "திருக்குறள் கீர்த்தனைகள்" என்னும் நூலை சிறந்த முறையில் பல சிரமங்கள் மத்தியிலும் அழகாக அச்சேற்றி, இசை நூலுருவாக்கித்தந்த சிவரஞ்சனம்ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளும், ஆசிகளும் உரித்தாகட்டும்.

சுபம்

இங்ஙனம்,
நன்றியுடன்,
திருமதி.சு. வீரமணிஐயர்.

# திருக்குறள் கீர்த்தனைகள்

## அறத்துப்பால்

**கடவுள் வாழ்த்து** **அதிகாரம் 1**

**குறள் 1**

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

இராகம் :- பூபாளம் தாளம் :- ஆதி

பல்லவி

கடவுளை வாழ்த்திடுவோம் - எங்கள்
இடரினைப் போக்கி இன்பமளிக்கும் தூய
(கடவுள்)

அனுபல்லவி

அகரம்முத லெழுத்தாய் அமைந்ததைப் போல
அனைத்தையும் முதல்வனாய் ஆண்டவனாகிய
(கடவுள்)

சரணம்

ஆதி அனாதியாய் அனைத்தையும் படைத்து
அன்புடன் காத்து அழித்திடும் பகவனை
ஓதிஉணர்ந்து இன்ப வாரிதியினில் தோய்ந்து
ஒருநாளைக் கொருதரம் ஒருபொழு தாகிலும்
(கடவுள்)

குறள் 2

"கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

இராகம் :- கல்யாணி                    தாளம் :- ஆதி

பல்லவி

பெற்றபயன் என்ன சொல்வாய் - ஈசன்
பொற்பதங்கள் தமைப் போற்றித்துதிக்காமல்

அனுபல்லவி

நற்பதங்கள் தமைநாடாமல் நீயிங்கு
கற்பவை கசடறக் கற்றும் உலகினில்

சரணம்

கண்ணிருந்தும் குருடாய்த் தவித்தல்போல
காலிருந்தும் முடமாய் முடங்கல்போல
பண்ணிருந்தும் பாடும் இசையுமில் லாமைபோல
பக்தியில்லாமல் வீணாய்ப் படித்ததனால் இப்போ

குறள் 3

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

இராகம் :- ஆரபி தாளம் :- ஆதி

பல்லவி

நிலவாழ்வினிலே நீ மனமகிழ்வொடு
நீடூழி வாழ்ந்திடுவாய் - நல்நெஞ்சே

அனுபல்லவி

மலராம் உள்ள மலர்மிசை ஏகிடும்
மாட்சிமை பெற்றஈசன் மலரடி சேர்ந்து

சரணம்

இம்மையும் மறுமையும் இன்பம் தளைத்திட
இப்புவி வாழ்வினில் இலங்கித் துலங்கிட
மும்மல மறுத்து முக்தியே கொடுக்கும்
முதல்வனின் பதத்தை முழுமனதுடன் வாழ்த்தி

குறள் 4

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

இராகம் :- கானடா தாளம் :- ஆதி

பல்லவி

இடும்பை என்பதில்லையே - என்றும்
கொடும்பல இடர்வந்து கடும்தொழில்புரிந்தாலும்

அநுபல்லவி

படும் துயரனைத்தும் பரிதிமுன் பனிபோல்
பறந்திடும் இறைவனின் அருள் முன்னராதலால்

சரணம்

ஆண்டவனிடத்தினில் அன்பு நெறியில் சென்றால்
வேண்டியபடி அருள் விரும்பியே தருவான்
வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனின்
மாண்புறும் மலரடி மகிழ்வுடன் சேர்ந்தாற்கு

குறள் 5

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

இராகம் :- பிலகரி    தாளம் :- ஆதி

பல்லவி

பொருள் புரிந்திறைவனைப் போற்றிப்புகழ்வாரை
இருவினை சேராதாம் - உண்மைப்

அனுபல்லவி

அருள்தரும்இறைவனை அணுகுவாரிடம்பெரும்
இருள்நிறை இருவினை இருந்திடாதாகையால்

சரணம்

நல்வினை தீவினைகள் நாடிப்புரிந்திடினும்
பல்விதமாகப்பாப புண்ணியம் செய்திடினும்
நல்லிறைவன் கழலாம் நற்பதம்நாடிவிட்டால்
வல்வினையுறுத்துமவ் வருத்தமும் நீங்குதலால்

குறள் 6

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்"

இராகம் :- கரகரப்ரியா தாளம் :-ஆதி

பல்லவி

ஐந்து பொறிகளது அவாவினைஅடக்கினால்
வந்திடும் வாழும்நெறி - உலகினில்

அனுபல்லவி

சிந்தையில் உண்மையும் சீரியஒழுக்கமும்
தந்துஒர்அறநெறி தவறாது காத்துஉந்தன்

சரணம்

மெய்யும் வாயும் கண்மூக்குச் செவிதரும்
பொய்யாம் ஆசையைப் போக்கிவிட்டென்றும்
தெய்வமதனைத் துதி உய்வாய் நீடூழிகாலம்
மெய்யுரையாம் இது பொய்யல்லவேமாய

குறள் 7

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

இராகம் :- காபி

தாளம் :- ஆதி

பல்லவி

தனக்குவமை இல்லாத்தனிப்பெரும் இறைவனின்
தாளதைச் சேர்ந்திடுவாய் - மனமே

அநுபல்லவி

மனக்கவலையது மாயமாய்ப் பறந்திடும்
தினத்திற் கொருதரமாகிலும் தெய்வீகம்

சரணம்

அருளது கிடைக்கும் அவன்பதம்நாடு
பொருளுணர்ந்து நிதம் போற்றியேபாடு
பெருமானவனருள் பெற்றவற்கல்லால்
வரும் மனக்கவலைகள் மாற்றிடல் அரிதாம்

குறள் 8

"அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

இராகம் :- ஸிம்மேந்திரமத்யமம் தாளம் :- ஆதி

### பல்லவி

அறக்கடல்தனில் நீந்தும் அந்தணனாகும்அத்
திறக்கடவுளடி தொழுதிடுவாய் - மனமே

### அனுபல்லவி

பிறகடலாகிய பொருள் இன்பம்நீந்தப்
பெறுவதற்கரிய பேறுதரும்புனித

### சரணம்

அறமதன் திறமதை அறிந்து இறையவன்
அக்கடல்தனிலே ஆனந்தமாய்மிதப்பான்
பொறைஎனும் முறையினால் பேரன்பு நெறியினால்
பொருள் இன்பக் கடல்நீந்தப் பேரருள்புரியுமவ்

குறள் 9

"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

இராகம் :- ஸிந்துபைரவி தாளம் :- ஆதி

பல்லவி

கொள்கையில்லாதார் கொள்ளும் ஐம்பொறியினால்
கொண்டிடும் குணமேது? - உலகிலொரு

அநுபல்லவி

உள்ளமதில்ஒரு வெள்ளை இடத்தில்அன்பு
வெள்ளமாய் ஈசனைக் கொள்ளவேண்டும் என்ற

சரணம்

கோள்இல்லாப் பொறிகளால் குணப்பயன் இல்லைஎட்டு
குணங்களைக் கொண்டிருக்கும் குவலயநாதனின்
தாளதை வணங்காத தலையினால் பயனில்லை
நாளதை வீணாக்கி நானிலத்தில் தெய்வ

குறள் 10

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேரா தார்"

இராகம் :- தேஷ் 	தாளம் :- ஆதி

பல்லவி

பெருங்கடல் நீந்திடுவார் - உலகினில்
வரும்கடும் வருத்தங்கள் தரும்கொடும்பிறவியின்

அனுபல்லவி

அரும்பெரும் இறைவனின் அடிகளைஅடைந்தவர்
விரும்பும் அருளை ஈசன் விருப்புடன் கொடுப்பதால்

சரணம்

பிறந்து பிறந்துலகில் புரிந்து வினையதனால்
வருந்தியிடரதனில் அழுந்திடுவார் ஈசனை
மறந்து இறந்திடுவார் மானிலவாழ்வதனில்
மறவாதிறைவனது மலரடி சேர்ந்தவர்கள்

வான் சிறப்பு அதிகாரம் 2

குறள் 11

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரல் பாற்று"

இராகம் :- ஷண்முகப்ரியா தாளம் :- ஆதி

பல்லவி

பெய்யும் மழையது பெருமுலகனைத்தையும்
உய்யும்படி செய்து உயிர்களைக்காக்கும்

அனுபல்லவி

தெய்வ மழையது தேவாமிர்தம்போல
வையக மனைத்தையும் வாழ்விக்கவந்து

சரணம்

அமிழ்தம் உண்டார் அழியாது நிலைத்தல்போல
அவனியை அழியாது ஆக்கிடும்மழையதால்
அமிழ்தமாம் உலகில் அம்மழையே என்று அதை
அறிந்திடுவீர் நீரும் நிலவளமும்செறியப்

குறள் 12

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை"

இராகம் :- வாசஸ்பதி தாளம் :- ஆதி

பல்லவி

கருணையும் காருண்யப்பெருமைத் தியாகமும்
வருமழை வளமுறத் தருவதைப்பாராய்

அனுபல்லவி

பெருமழைபெய்து பெருகிட வளங்கள்
தருதாவரமுதல் தளைத்திடச்செய்யும்

சரணம்

உண்டுகளிக்குமிந்த உலகினில் உணவினை
உண்டாக்கி உளவாக்கி உண்பித்துஉவகைஊட்டி
உண்பார் உண்ணீரதாய் உணவாகி உண்ணப்படும்
உண்மை உத்தமஉருத் தண்ணீர்மயமாகி

குறள் 13

"விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி"

இராகம் :- ஹம்ஸத்வனி தாளம் :- ஆதி

பல்லவி

பஞ்சமும் பசியும் பாரினுள்படர்ந்து
வஞ்சனையாய் வருத்தும் வான்மழையின்றேல்

அனுபல்லவி

கொஞ்சமழைகூடக் கொட்டாமலும்உலகில்
மிஞ்சிமழையது மிகுதியாய் சொரிந்தாலும்

சரணம்

ஆழ்ந்தகடல் நீரதால் சூழ்ந்த இவ்வுலகினில்
வாழ்ந்ததும் தாழ்ந்ததும் வான்மழையாலே
வீழ்ந்தமழையினால் வாழ்ந்திடும் பேருயிர்கள்
வீழாதுமழை பொய்ப்பின் விபரிக்க - முடியாத

குறள் 14

"ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளங்குன்றிக் கால்"

இராகம் :- ஹிந்தோளம் தாளம் :- ஆதி

பல்லவி

மாரிமழை குன்றின் மானிலத்தில்உழவர்
ஏரின்எழிலான தொழிலேது? - நன்

அனுபல்லவி

வாரிவாரிச் சொரிந்து வளங்கள் செழித்திடவே
வானின்அருளென வந்திங்கு வீழ்ந்திடும்

சரணம்

உழுதிடார் உழவர் உணவுமிராதுலகில்
உள்ளவரனை வரும் உழன்று வருந்திடுவர்
அழுகையும் அவலமும் வறுமையும் மிகுந்திடும்
புயலெனும் வருமழை பயனுறப்பெய்யும்

குறள் 15

"கெடுப்பதூ உம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூ உம் எல்லாம் மழை"

இராகம் :- பாகேஸ்வரி தாளம் :- ஆதி

பல்லவி

நல்லதும் மழையே நானிலத்தையழிக்க
வல்லதும் எல்லாம் வானின் மழையே

அனுபல்லவி

பல்வித உயிர்களைப் பாரினில் கெடுத்து
அவ்விதம் கெடுத்தோரை ஆக்கி எடுப்பதால்

சரணம்

பெய்யாது நின்று பெருமழை உலகினில்
உய்யாது கெடுப்பதும் கெடுத்திடும் உயிர்களை
மெய்யாகப் பெய்து மேலாக்கி எடுப்பதும்
பொய்யாகி மெய்யாகிப் பெய்யும் மழையதால்

குறள் 16

"விசும்பின் துளி வீழின் அல்லாமற் மற்றாங்கே
பசும்புல் தலை காண்பதரிது"

இராகம் :- ரஞ்சனி　　　　தாளம் :- ஆதி

பல்லவி

மழைத்துளி வீழாது மண்ணில்புல் தன்னிலும்
தழைத்துத் துளிர்த்தலைத் தருவது அரிதன்றோ

அனுபல்லவி

பிழைத்திடும் உயிர்களை பிறவையும் உலகினில்
வளர்த்திட வாய்த்திடும் வானின் அருளெனும்

சரணம்

பச்சைப் பசேல்என்று பசுமைநிறம் பார்க்க
இச்சை தரும் இனிய புற்களையும் உலகார்
மெச்சும்படி வளர்க்க மேலிருந்து துளியாய்
இச்செகத்தில் வீழ்ந்து இன்பம் தரும்அந்த

குறள் 17

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகிவிடின்"

இராகம் :- ஹம்ஸானந்தி தாளம் :- ஆதி

பல்லவி

பெரும்மழை உலகினில் பெய்யாவிடின் நெடும்
கருங்கடலின் இயல்பும் மழுங்கி அழிந்துவிடும்

அனுபல்லவி

அரும்பெரும் மழையது ஆழ்கடல்நீரினில்
ஆவியாய்ப் பிறந்துபின் மேகமாய் மாறி நல்கும்

சரணம்

பரந்த கடலினில் பிறந்திடும் மழையின்றேல்
தரங்கமாம் கடலும்தன் நீர்மை குன்றிஅதில்
பிறந்திடும் உயிர்களும் பிறமுத்து மணிகளும்
இறந்திடும் உலகினில் இருக்கும் உயிர்களும்

குறள் 18

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

இராகம் :- பந்துவராளி　　　　　　　தாளம் :- ஆதி

பல்லவி

நித்திய பூசைகள் ஏது? - தெய்வ
பக்தியோடடியார் பாரினில் புரிந்திடும்

அனுபல்லவி

இத்திருப்பூமியில் இல்லாது வான்மழை
வற்றிவறக்குமேல் வானோர்க்குச் செய்யும்

சரணம்

பூசைசெய்யும் அடியார் ஆசையைத்தீர்த்திட
தேவைகள் யாவுமே தேடினும் கிடைக்காது
பூமியில் பஞ்சமும் பசியும் வறுமையும்
புகுந்து உயிர்களிடம் மிகுந்துவருத்துதலால்

குறள் 19

"தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

இராகம் :- நாட்டைக்குறிஞ்சி தாளம் :- ஆதி

பல்லவி

வானம்இரங்கி வழங்கும் மழையின்றேல்
தானமும் தவமும் தங்காது - உலகினில்

அனுபல்லவி

வானவரும் நிலம் வாழ்பவரும் மற்றும்
ஏனைய உயிர்களுக்கின்றியமையாத
ஆவலோடெதிர்பார்க்கும்

சரணம்

மண்ணுலகில் வாழும் இல்லறவாழ்வினில்
மகிழ்ச்சியுடன் புரியும் தானதருமங்களும்
விண்ணுலகம் எய்தவிரும்பும் துறவறத்தில்
பண்ணும் தவங்களும் பாழாகி விடுதலால்

குறள் 20

"நீரின்றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின்றமையா தொழுக்கு"

இராகம் :- சங்கராபரணம் தாளம் :- ஆதி

பல்லவி

நீரில்லாமல் உலகநிலை அமையாதுதண்
நீரது வான்மழை இன்றி வழங்காது

அனுபல்லவி

பாரினில் வாழ்ந்திடும் யாருக்கும் பாருக்கும்
நீரின்றெல் யாவுமே சூனியமாவதால்

சரணம்

வானின் அருளென அமுதமென ஒழுகும்
நீரின் திறனால் இந்த நிலமது வாழ்வதன்றோ
நானிலமதனில் நாம்நல்லறம் பொருளின்பம்
நாடிநடத்துதற்கு ஏது அதாய்அமைந்த

நீத்தார் பெருமை அதிகாரம் 3

குறள் 21

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"

இராகம் :- செஞ்சுருட்டி தாளம் :- ஆதி

பல்லவி

அறிவுதரும் நூல்கள் துறவுபூணும்ஒழுக்க
நெறியுடையோரை துணிவுடன் போற்றிடும்

அனுபல்லவி

அறியாமையை நீக்கி அறம்வளர்த்தொழுகி
பிறவித்துன்பம் களையப்பிற ஆசைதவிப்பாரை

சரணம்

அகத்திலும் புறத்திலும் ஆசைகளை ஒழித்து
ஆத்மீக ஞானத்தை அனுபவித்து வளர்த்து
இகத்திலும் பரத்திலும் இன்பமாய் இருப்போரை
ஜெகத்திலும் விழுமிய பெருமையுடன்மதித்து

குறள் 22

"துறந்தோர் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

இராகம் :- ஆனந்தபைரவி    தாளம் :- ஆதி

பல்லவி

இறந்தோர் தொகையை எண்ணலாமா? அதுபோல்
துறந்தோர் பெருமை சொல்லலாமா? பிறந்து

அனுபல்லவி

பிறந்திறந் தவர்களைப் பிழையின்றிஎண்ணி
அறிந்திடல் முடியாது ஆதலினாலே

சரணம்

பிறந்து வளர்ந்துலகில் பீடிக்கும் பற்றுக்களை
துறந்து மனதில்இன்பம் நிறைந்தவர் பெருமையின்
திறந்தனைக் கூறுதல் இறந்தாரை எண்ணித்தொகை
அறிந்திடுதல் போல அமைந்திருத்தலால் இங்கு

குறள் 23

"இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்றுலகு"

இராகம் :- தோடி தாளம் :- ஆதி

பல்லவி

துறவறம் பூண்டுமிக்க தூய்மையுடன் ஒழுகும்
திறமுள்ளார் பெருமையே உலகினில் உயர்ந்ததாம்

அனுபல்லவி

பிறவியாம் பிணியது பீடிக்காமல்இந்தப்
பிறவியிலாகிலும் துறவியாகத் துறக்கும்

சரணம்

இம்மைமறுமை என்னும் இருமையின இயல்பினை
செம்மையாகத் தெரிந்து இன்பதுன்பமறிந்து
தம்மையும் அறவழி தவறாது காத்துநின்று
இம்மையும் மறுமையும் இன்பம்திளைத்திட

குறள் 24

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

இராகம் :- வசந்தா தாளம் :- ஆதி

பல்லவி

திண்மையாம் தோட்டியால் திரியும்ஐம்பொறிப்புலன்
உண்மையாய்க் காத்திடுவாய் - மனமே

அனுபல்லவி

மண்ணுலகினில் உன்னை மாயமாக்கிடும் மெய்வாய்
கண்மூக்கு செவிஐந்தும் பண்ணிடும் ஆசைநீக்கி

சரணம்

பேரின்பமாம் அந்தப் பெருநிலத்தின் கண்ணே
நீயின்பமாய் வாழ நிலைத்திடும்வித்தாக
பாரின்கண் அடக்கிடும் பொறிப்பயன் அமைந்திடும்
நீயிந்த நெறியதால் நெஞ்சினில் உரம்கொண்டு

குறள் 25

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி"

இராகம் :- வலஜி தாளம் :- ஆதி

பல்லவி

ஐந்து பொறிப்புலனை அடக்கிய ஆற்றலினால்
இந்திரனே எமக்கு இணையற்ற சான்றாவான்

அனுபல்லவி

இந்த உலகினில் இருக்கும் இன்பதுன்பம்
வந்து உறுத்துதற்கு வாய்ப்பாயமைந்திருக்கும்

சரணம்

தேவாதி தேவர்க்கும் தேவனாய் அமைந்து
மூவாதிமூவர் போல் மேதாவியாய் என்றும்
சாவாத வரம்பெற்று சாத்வீக வாழ்வும்பெற்ற
கோமானாய் வானவர்கள் கொண்டாடும் இந்திரன்தன்

குறள் 26

"செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"

இராகம் :- பூர்விகல்யாணி தாளம் :- ஆதி

பல்லவி

அரியன செய்பவர் பெரியர் - அவர்க்கு
சரிநிகராய் அதை எவருமே செய்வதற்

அனுபல்லவி

அரியன செய்திடல் ஆகாத அனைவரும்
சிறியவராகச் சிந்தை செய்வதனால்

சரணம்

ஐம்புலனை அடக்கி அரும்பெரும் செயல்செய்து
நம்மிறைவனடிகள் நாடிடுவார் பெரியர்
தம்புலன் அடக்காமல் தனிப்புலன் வழியலைந்து
இம்மண்ணினில் சிறியர் எளியன செய்திடுவர்

குறள் 27

"சுவை ஒளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு"

இராகம் :- பெஹாக் தாளம் :- ஆதி

பல்லவி

அவனிடத்தின் கண்ணே அளப்பரியஇந்த
அவன ிஅமைந்திடும் அனுபவமூலமாய்

அனுபல்லவி

தவநிறை ஆற்றலால் தன்ஐந்து பொறிப்புலன்
பவனி வருவதை பாதுகாப்பான் எவனோ

சரணம்

மெய்வாய் கண்மூக்கு செவியெனும் பொறிகளின்
பொய்யாமூறு சுவைஒளி நாற்றம் ஓசைப்புலன்
எல்லா வகைதெரிந்து, ஏதுவாம் தத்துவத்தை
நல்லா யறிந்துநன்கு, நடந்திடுவான் எவனோ

குறள் 28

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்"

இராகம் :- கீரவாணி    தாளம் :- ஆதி

பல்லவி

நிறைந்த மொழியேபேசும் துறந்தமனிதரது
சிறந்த மொழிகளவர் திறந்தனைக் காட்டிவிடும்

அனுபல்லவி

துறந்த மனிதரிந்த பரந்த உலகம் தன்னில்
பிறந்தோரனைவருக்கும் பகர்ந்திடும் நல்லருள்

சரணம்

வேதமந்திரமென விளங்கும் அவர்மொழிகள்
ஓதியுணர்ந்தால் அவர் உண்மைப் பெருமையது
தானாகவே விளங்கும் தகுந்த பலனும் தரும்
தேனாக இனித்திடும் மாறாது என்றும் அன்பு

குறள் 29

"குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

இராகம் :- எதுகுலகாம்போதி தாளம் :- ஆதி

பல்லவி

முற்றும் துறந்த பெரும் முனிவரின் முனிவின்முன்
அற்ப பொழுதேனும் நிற்பது அரிதன்றோ

அனுபல்லவி

வெற்பனைய குணத்தின் உச்சியிலேநின்று
நற்குணப் பண்புகளால் நானிலப்பற்றுக்களை

சரணம்

ஐந்துபொறிப்புலனின் ஆசைகள் அனைத்தையும்
சிந்தையால் அடக்கியே சீரிய குணக்குன்றில்
நின்றிடுவார் வெகுளின் நிலத்தினில் எவருமே
நின்று கணப்பொழுதும் வென்றாரில்லையாதலால்

குறள் 30

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

இராகம் :- ஸாவேரி தாளம் :- ஆதி

பல்லவி

அந்தணர் என்போர் எந்தஉயிர்களையும்
சொந்த உயிர்போல தந்திடுவார் அவரே

அனுபல்லவி

இந்த உலகினில் இருக்கும் உயிர்கள்
இன்பமாக வாழ அன்பு பூணும் அவரே

சரணம்

அறத்தோர் அவர்கள் சிறப்பான அன்பின்
திறந்தாலுயிர்க ளிடத்தே ஒழுகி
துறப்பார் உலகைத் தூய்மையானஈசன்
பதத்தை மறவார் பாரில் அவரே

குறள் 31

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

இராகம் :- பைரவி தாளம் :- ஆதி

பல்லவி

அறமதைப்போல் இந்த அவனியில் ஆக்கம்தரும்
திறமுடையன இங்கு பிறஉளவோ? - நல்ல

அனுபல்லவி

சிறப்புறும் பேரின்பமாம் சிறந்த அப்பேற்றையும்
துறக்கம் முதலாய தூய செல்வமும் தரும்

சரணம்

இம்மையும் மறுமையும் வீடென்னும் மூன்றிற்கும்
உண்மையாய் அறமது உறுதியையும் ஈய்ந்து
மும்மைக்கும் உயிர்களின் முழுத்துணையாய் அமைந்து
திண்மையுடன் என்றும் தீரா வலிநிறைந்த

குறள் 32

"அறத்தினூங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு"

இராகம் :- மணிரங்கு தாளம் :- ஆதி

பல்லவி

கேடுவேறேதும் இல்லையே - உலகினில்
நாடுவாரின்றி இந்தநல்லறம் மறத்தல் போல்

அனுபல்லவி

வீடு முதலாம் இன்பப் பேறுகளனைத்தையும்
கூடிடச் செய்யும் அறக்குணங்களை மறத்தல்போல்

சரணம்

அறத்தின் வலிமையும் ஆக்கமும் போல் உலகில்
எதற்குமே இல்லையதால் அறத்தின் பெருமையதை
வெறுப்பதும் அரும்பெரும் அறமதன் திறமதை
மறப்பதையும் போல மடைத்தனம் இல்லையதால்

குறள் 33

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல்"

இராகம் :- மோஹனம் தாளம் :- ஆதி

பல்லவி

ஆனவரை அறங்கள் அன்புடன் செய்வாய்
தூயமனம் வாக்குக் காயங்களைக் கொண்டு

அனுபல்லவி

மானிலத்தில் அறத்தை நாடி நற்சிந்தையாலும்
தேனின்பச் சொல்லினாலும் செயல்களினாலும் உன்னால்

சரணம்

இல்லறம் தன்னில் இருக்கும் பொருளிற்கேற்ப
வல்ல துறவறத்தில் வாய்த்த உடலுக்கேற்ப
நல்ல அறங்கள் தமை நாடிஇடைவிடாது
எல்லாம் வல்ல இறைவன் எழிலடிகள் இறைஞ்சி

குறள் 34

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

இராகம் :- மாயாமாளவகௌளை தாளம் :- ஆதி

பல்லவி

மனத்தின்கண்ணே நிறைந்த மாசுபடிந்தார் செய்யும்
அறத்தினால் அவனியில் அணுவேனும் பயனில்லை

அனுபல்லவி

நிலத்தினிலே அவர்கள் நினைக்கும் எல்லா எண்ணப்
பலத்தினிலே தீது பதுங்கியிருத்தலினால்

சரணம்

பேசிடும் வாக்கினிலே பெருமிதம் மிஞ்சிநிற்கும்
பூசிவேடம் புனையும் காயத்தில் நஞ்சிருக்கும்
மாசு நிறைந்திருக்கும் மனத்தினால் மனிதர்கள்
ஆசைதீர ஆரும் அறங்களைச் செய்திட்டாலும்

குறள் 35

"அழுக்காறவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்"

இராகம் :- பீம்பிளாஸ் தாளம் :- ஆதி

பல்லவி

அறமாவது அதுவே - உலகினில்

நிறைவாய் மாந்தர் நிலத்தினில் புரிந்திடும்

அனுபல்லவி

மறமாம் வெகுளியும் மனத்தில் அவாவதும்

பொறாமையும் வன்சொல்லும் பெருத அறம் எதுவே

சரணம்

பிறரில் பொறாமையும் புலன்களின்ஆசையும்

பிறரின்மேல் கோபமும் பேசிடும் வன்சொல்லும்

அறவே நீக்கிவிட்டு அன்போடு அகத்தாலும்

புறத்தாலும் புரிந்திடும் அறங்களிங்கு எதுவே

குறள் 36

"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத்துணை"

இராகம் :- மலயமாருதம் தாளம் :- ஆதி

பல்லவி

அறமே செய்திடுவாய் - (என்றும்) பின்பு
அறம் செய்வமெனக் கூறியிருந்திடாமல்

அனுபல்லவி

அறத்தினை நாடோறும் ஆற்றாமல் நீ இங்கு
இறக்கும் போது செய்வம் எனக்கருதாது இப்போ

சரணம்

உடலதினின் நின்று உயிர் போகும் போது
திடமான அழியாத துணையதாய் அறமது
கடவுளின் கருணையாம் கழலடி சேர்த்துவிடும்
உடலழிந்தாலும் உந்தன் உயிருக்குத் துணையான

குறள் 37

"அறத்தாறிது எனவேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை"

இராகம் :- சுருட்டி தாளம் :- ஆதி

பல்லவி

அறமதன் திறமதை ஆராய்ந்து நன்றாக
அறிந்திட வேண்டும் என்ற அவசியமே இல்லை

அனுபல்லவி

அறமதைப் புரிந்தவர் ஆனந்தமாய் இவர்
மறம் புரிந்தவர் மனம்வருந்தி வாழ்வதைக் கண்டா

சரணம்

சிவிகையில் ஊர்ந்து பவனிவந்து இன்ப
உவகை எய்திடுவான் உலகில் அறம் புரிந்தான்
சிவிகையைச் சுமந்து நவிலவே முடியாத
கவலையுடனே வாழ்வான் அறமில்லான் ஆதலால்

குறள் 38

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"

இராகம் :- சக்ரவாகம் தாளம் :- ஆதி

பல்லவி

அறமெனும் கல்லது பிறவிப் பெரும் வழியை
அறவே அடைத்திடும் திறமேயுடையதாம்

அனுபல்லவி

அறமதை உலகினில் ஒருநாளாகிலும்
தவறாது நாடோறும் தான் புரியினும் அந்த

சரணம்

புவனியில் பிறந்து புரியும் வினைகள் தமை
எவனிடத்திருந்தும் இல்லாது செய்த பின்னர்
தவநிறைப் பேரின்ப வீடதை நல்கிஇந்தப்
புவனியில் மீண்டும் பிறவாது செய்வதனால்

குறள் 39

"அறத்தான் வருவதே இன்பமற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

இராகம் :- நாதநாமக்கிரியா தாளம் :- ஆதி

பல்லவி

அறத்தினால் வருவதே இன்பம் - உலகில் இல்
அறத்தினால் வருவதே இன்பம்

அனுபல்லவி

அறத்தினால் ஆகாமல் புறத்தினால் வரும் இன்பத்
திறத்தினைத் துன்பமென தூயோர் கருதுவதால்

சரணம்

அறம் செய்யாதார் அவனியில் புகழ்தனை
அணுவளவேனும் அடைந்தாரல்லர்
அறம் செய்திடுவார் அவனியில் இன்பமும்
பெரும் புகழோடு பெருவாழ்வும் பெறுதலால்

குறள் 40

"செயற்பாலதோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி"

இராகம் :- ஸாருகேசி தாளம் :- ஆதி

பல்லவி

செய்வதற்குகந்தது அறமே - இந்த
வையகமதிலே வாழ்வோர் அனைவரும்

அனுபல்லவி

செய்வதற்கே உதவாத் தீது நிறைந்த பழிப்
பொய்யாம் வினையதனைப் போக்கி ஒழித்து விட்டு

சரணம்

வாழ்வார் அனைவரும் வணங்கிடும் இறைவனின்
தாள்களைப் போற்றி நல்ல தருமம் பல புரிந்து
ஊழாம் வினையைப் போக்கி உயிர்களில் அன்பு கொண்டு
வாழ்நாளில் புரிந்திட வாய்த்தது எல்லோர்க்கும்

குறள் 41

"அன்பீனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

இராகம் :- வராளி தாளம் :- ஆதி

பல்லவி

அன்பினால் பெற்றிடும் ஆர்வமுடைமை தரும்
பண்பதே பாரினில் நண்பாகும் - உண்மை

அனுபல்லவி

அன்பின் தொடர்பினால் அவனியில் ஆக்கிடும்
அன்பரின் அன்புதான் நண்பெனப்படுதலால்

சரணம்

மாபெரும் உலகினில் யாவரும் விரும்பிட
பேரன்பின் திறனதால் பெற்றிடும் நண்பெனும்
சீரிய பண்பதன் சிறப்பின் பெருமையை
ஆருமே அளந்ததை அறிவதற்கரியதாம்.

குறள் 42

"அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

இராகம் :- பிருந்தாவனம் தாளம் :- ஆதி

பல்லவி

இல்லற வாழ்வினில் இன்பமாய் ஆற்றிடும்
நல்லற நெறிஅதுவே - உலகினில்

அனுபல்லவி

எல்லா உயிர்களிடம் நல்லன்பு பூண்டொழுகும்
வல்லமையோடன்பு வாழ்வு நடத்திடுதல்

சரணம்

இன்புற்று இல்வாழ்வார் பின்பு துறந்தெய்தும்
இன்பத்தினின்பம் பேரின்பமென அறிந்தோர்
அன்பு நிறைந்திங்கு ஆற்றுமில்லறத்தோடு
நன்கு பொருந்திடும் நன்நெறிப் பயன் என்பார்

குறள் 43

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

இராகம் :- சுத்தஸாவேரி தாளம் :- ஆதி

## பல்லவி

அறமதை ஆற்றுதற்கே அன்பு துணை என்பார்
மறமதை நீக்க அன்பு நறுந்துணை என அறியார்

## அனுபல்லவி

மறமதாலாகும் பகை மறந்து நட்பதுதரும்
திறனுடையன்பின் துணை மறம்நீக்குமென்றறியார்

## சரணம்

மண்ணுலகில் வாழும்இல்லற வாழ்வில் என்றும்
பண்ணும் அறங்களுக்கு அன்பே அருந்துணையாம்
திண்ணமாய் மறத்தையும் நண்ணிடாமல் செய்யும்
எண்ணரும் துணையான் நல்லன்பறியாதார்

குறள் 44

"என்பில் அதனை வெயில் போலக் காயுமே
அன்பில் அதனை அறம்"

இராகம் :- தேசிகதோடி தாளம் :- ஆதி

பல்லவி

அன்பில்லா உயிரதை அறமதன்திறமது
துன்புறுத்தி என்றும் துயரத்துள் ஆழ்த்தும்

அனுபல்லவி

என்பில்லா உடலது எறிக்கும் வெயில் தனிலே
நன்குகிடந்து படும்துன்பமதைப் போல

சரணம்

எங்கும் சமத்துவமாய் எறிக்கும் வெய்யிலது
என்பில்லாத உடலைத் துன்புறுத்தல் போல
தங்கும் அறமது தன்நெறியில் நின்று
அன்பில்லா உயிரையே அல்லல்படுத்தி விடும்

குறள் 45

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த்தற்று"

இராகம் :- உமாபரணம் தாளம் :- ஆதி

பல்லவி

அகத்தினில் அன்பில்லாத ஆருயிர் ஆற்றுமிந்த
இகத்திலில்லற வாழ்வில் இன்பமென்பதில்லையே

அனுபல்லவி

செகத்தில் நல்வளம் வற்றி, செழிப்பில்லாமல் வாழும்
நிலத்தினில் பயனற்று மரம்தளிர்தலை போல்

சரணம்

அன்பே உறுதுணையாய் அமைந்த இல்லற வாழ்வில்
அன்பின்றி எய்திடும் இன்பமோரின்பமோ?
அன்பகத்தில்லாது அனுபவிக்கும் இன்பம்
துன்பமெனத் தூயோர் நன்கு பகர்ந்திடுவார்

குறள் 46

"புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பிலவர்க்கு"

இராகம் :- கமாஸ் தாளம் :- ஆதி

பல்லவி

அகத்துறுப்பான அன்பு இல்லார் தமது
புறத்துறுப்புகளினால் பெறும் பயன் யாது?

அனுபல்லவி

இகத்தில் இல்லற வாழ்வில் இருப்பவர் உடலின்கண்
மிகத்திறமான் அந்தமெய்யாம் உறுப்பினுள்ளே

சரணம்

இல்லற வாழ்வினிற்கு இன்றியமையாத
நல்லுறுப்பாம் அன்பு இல்லாதவர் தமக்கு
உள்ளப்புற உறுப்பாம் இடம் பொருள் ஏவலினால்
கொள்ளும் ஒருவித நற்பயன் இல்லையதால்

குறள் 47

"அன்பின் வழியதுயிர் நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

இராகம் :- கேதாரகௌள    தாளம் :- ஆதி

பல்லவி

அன்பின் வழிகளினால் ஆருயிர் நிலையது
அமைந்திடும் உடல் தனிலே - என்றும்

அனுபல்லவி

அன்பின் நெறியறியா ஆருயிர் வாழுமுடல்
என்புதோல் போர்த்த வெறும்கன்ம உடலதனால்

சரணம்

அன்பு நிறைந்தவர் இன்னுயிர் என்றுமே
இன்பமாய் வாழ்ந்திடும் நல்லுடல் அதுவே
அன்பே இல்லாத அப்பண்புடையார்க்குயிர்
நன்கிருந்தாலுமவர் நடைப் பிணமாதலால்

**இல்லறவியல் இல்வாழ்க்கை அதிகாரம் 5**

**குறள் 48**

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்றதுணை"

இராகம் :- தன்யாசி தாளம் :- ஆதி

பல்லவி

இல்லறம் புரிந்து இன்பமாய் வாழ்பவன்
எல்லாற்கும் ஏற்ற ஓர் வல்ல துணையாவான்

அனுபல்லவி

நல்லறங்கள் இந்த நானிலத்தில் புரிந்து
சொல்லரிய உதவி செய்திடுவானாதலால்

சரணம்

அறநெறி தவறாத இயல்பினையுடைய
துறவிக்கும் உலகினைத் துறந்த முனிவருக்கும்
விரதம் காக்கும் பிரமசாரி இம் மூவர்க்கும்
உதவிகள் ஒழுக்க நெறி நின்று ஆற்றிடும்

குறள் 49

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

இராகம் :- ஹரிகாம்போஜி தாளம் :- ஆதி

பல்லவி

ஏற்ற துணை அவனே - யாவரும்
போற்றிடும் இல்லறம் புரிந்திடுவான் யார்க்கும்

அனுபல்லவி

ஆற்றிடும் அறத்தினால் அனைவருக்கும் இன்பம்
தோற்றும்படி செய்து காத்திடுவான் என்றும்

சரணம்

இறந்தவர் யாருக்கும் இறுதிக் கடன்கள் செய்வான்
துறந்த அனைவருக்கும் தூயவினை புரிவான்
வருந்தி வறுமையதில் அழுந்துவாரெவருக்கும்
அருந்திட ஊண்முதல் அனைத்தும் உதவுவதால்

குறள் 50

“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானெனன்றாங்கு
ஐம்புலத்தா றோ:ம்பல் தலை”

இராகம் :-ஹமீர்கல்யாணி தாளம் :- ஆதி

பல்லவி

இல்வாழ்வு வாழும் இயல்புடையனைவரும்
நல்லறம் செய்து நல்வாழ்வு வாழ்வீர்

அனுபல்லவி

எல்லா அறங்களிலும் எழில் தரும் அறமதை
இல்லாளோடு இருந்து இன்பமாய்ப் புரிந்து

சரணம்

பிதிர்களனைத்திற்கும் பிறகடன்கள் செய்து
பதியாம் தெய்வத்தைத் துதிசெய்து விருந்தையும்
கதிமிகும் சுற்றமதின் கடமைகளையும் செய்து
மதியினால் தன்னையும் மதித்திந்த உலகினில்

குறள் 51

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

இராகம் :- சாமா

தாளம் :- ஆதி

### பல்லவி

என்றுமிவ்வுலகில் நிற்கும் - அவன் நெறி
நன்று நன்றென்று நல்லவர் புகழ

### அனுபல்லவி

என்றும் தன் வாழ்வில் எளிய பழிக்கஞ்சி
நன்கு பொருளீட்டி நல்லறம் செய்வான் வழி

### சரணம்

தேடிய பொருட்களின் தேவையினால் அறம்
நாடியே யாவர்க்கும் நல்லூண் அளித்துத் தானும்
கூடியே பகுத்துண்டு குதுகலமாய் வாழ்வை
மானிலத்தில் வாழும் மனிதனின் மாண்புகழ்

குறள் 52

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

இராகம் :- சாரங்கா தாளம் :- ஆதி

பல்லவி

அன்பினோடறமும் அமையும் இல்வாழ்வு
பண்பினோடு நல்ல பயனும் தருமே

அனுபல்லவி

இன்பமே உருவாம் இல்லாளுடன் என்றும்
இன்பமாய்ப் புரியும் இந்த உலகினிலே

சரணம்

அறங்கள் அனைத்தும் அன்புடன் புரிந்து
பிறரோடுணவைப் பகுத்துண்டு நல்ல
நெறியில் நின்றென்றும் நேர்மையாக வாழ்வில்
அறியாமை நீக்கும் அவனியில் ஆர்க்கும்

குறள் 53

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஓய்ப் பெறுவதெவன்"

இராகம் :- அடானா தாளம் :- ஆதி

## பல்லவி

நீயும் அங்கு பெறும் பயன் யாது? - வாழ்வில்
நீ அறத்தை விட்டு நெறிதவறிப் போனால்

## அனுபல்லவி

நீ இங்கு இல்வாழ்வை நீக்கிப் புறநெறியில்
போயங்கு பெற்றிடும் பெரும் பயன் இல்லையதால்

## சரணம்

பாரினில் புரிந்திடும் பேரறம் ஆற்றித்தன்
பாரியாளோடு இல்லின் வாழ்வினை வாழ்ந்து
யாரிடமும் அன்பும் அறநெறி பூண்டின்பம்
நாடி நடந்திடாமல் வேறு வழியில் சென்றால்

குறள் 54

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை"

இராகம் :- முகாரி தாளம் :- ஆதி

பல்லவி

புலன்வழி போகாமல் முயல்வாரினும் இந்த
நிலன்தனில் இல்வாழ்வு வாழ்பவன் பெரியனாம்

அனுபல்லவி

புலன்களை அடக்கியே புலிவாழ்வைத் துறந்திட்ட
நலன் உள்ளாரை விட நானிலத்தினில் தங்கள்

சரணம்

நல்லறம் என்று இந்த நன்னிலத்தில் புகழும்
இல்லற இயல்பினால் இல்வாழ்வு வாழ்பவன்
சொல்லரிய புகழும் செல்வமும் பெற்று என்றும்
நல்லின்பத்தோடு வாழ்வை நடத்துதலால் இங்கு

குறள் 55

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மையுடைத்து"

இராகம் :- காம்போஜி தாளம் :- ஆதி

பல்லவி

அறந்தனைத் தவறாது ஆற்றிடுமில் வாழ்க்கை
துறந்திட நோற்பாரினும் திறந்தனையுடையதாம்

அனுபல்லவி

பிற உயிர்களுக்குப் பேரன்புடனே பெரும்
அறங்களை ஆற்றி அவனியிலே தானும்

சரணம்

ஊனுடை முதலாய் உயிர்களுக்கு என்றும்
தான தருமங்கள் தம்மாலியன்றதாற்றி
தூய நெறியின்கண் யாவருமொழுகச் செய்து
தானுமுலகினில் காதலோடில்லாருடன்

குறள் 56

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாதாயின் நன்று"

இராகம் :- கேதாரம் தாளம் :- ஆதி

பல்லவி

சிறந்தது இல்லறமே - உலகினைத்
துறந்திடும் துறவறம் இல்லறம் இரண்டினுள்

அனுபல்லவி

துறந்திடும் துறவறம் தூயவரான மற்றும்
பிறரினால் சிறிதேனும் பழிக்கப்படாதெனினும்

சரணம்

நன்றே துறவறமும் நாடிப் புரிந்திடினும்
என்றுமே இல்லறம் போல் இன்பமிருப்பதில்லை
ஒன்றுபோல் இவ்விரு அறங்களிருந்தாலும்
நன்கு இல்லறமே நற்பயன் தருதலால்

குறள் 57

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இராகம் :- கேதாரகெளளை தாளம் :- ஆதி

பல்லவி

மண்ணுலகில் இல்வாழ்வு நண்ணி நடத்துபவர்
விண்ணுறை தேவரென எண்ணிடத் தகுவரே

அனுபல்லவி

பண்ணும் அறங்கள் ஆற்றி பகுத்தேயெவர்க்கும் தானும்
உண்ணும் இயல்புடைய உத்தமப் பண்பினோடு

சரணம்

இன்பமே உருவான இல்லாளுடனே என்றும்
அன்பாலனைவருக்கும் அறங்கள் பலபுரியும்
இன்னிலை இம்மையில் ஈடில்லாப் புகழையும்
நன்னிலையாம் தெய்வீக நலம் மறுமையில் தரும்

வாழ்க்கைத் துணைநலம் அதிகாரம் 6

குறள் 58

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

இராகம் :- புன்னாகவராளி தாளம் :- ஆதி

பல்லவி

நற்குண நற்செய்கை நற்பண்பமைந்து வாழ்வில்
சற்குணவதியே சாலச் சிறந்த துணை

அனுபல்லவி

இப்புவியில் வாழும் இல்லற வாழ்வினிலே
ஒப்புரவோடறம் ஒழுங்குடன் புரிந்திடும்

சரணம்

மனையறத்தினிலே மாண்புடனே ஒழுகி
அனைவருக்கும் அறங்கள் அன்புடன் ஆற்றிக் கொண்ட
கணவனுக்கும் இன்பம் களிப்புடனே அளித்து
பண்வருவாயறிந்து தகுந்த வாழ்வு நடத்தும்

குறள் 59

"மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

இராகம் :- பியாகடை　　　　தாளம் :- ஆதி

பல்லவி

எத்துணை மாண்புகழ் இருந்திடினும் இல்லாள்
நற்குணமில்லையேல் நல்ல வாழ்வுமில்லையே

அனுபல்லவி

நற்றுணையாய் இந்த நானிலத்தில் இன்பம்
பெற்றுப் பெருவாழ்வு பெருகி வாழச் செய்யும்

சரணம்

இல்லறமான திறம் நல்லறம் ஆற்றிட
வல்லமை இல்லாது வாய்க்கும் இல்லாளுடன்
செல்வமிருந்தாலும் சேர் புகழிருந்தாலும்
இல்லறம் புரிவது நல்லறமில்லையதால்

குறள் 60

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக்கடை"

இராகம் :- நீலாம்பரி தாளம் :- ஆதி

பல்லவி

இல்லறம் புரிந்திடும் இல்லாள் நல்லவளானால்
இல்லாத தென்பது இவ்வுலகில் ஏது?

அனுபல்லவி

நல்ல குணங்கள் இல்லா நாயகியுடன் வாழ்ந்தால்
எல்லா மிருந்தாலும் இல்லாமையாதலால்

சரணம்

மாண்பு நிறைந்த மனைவியினோடு இன்பம்
காண்பனயாவும் கண்டு களித்திடலாம்
மாண்பெனும் குணமில்லா மனைவியுடன் வாழ்ந்தால்
வீண் தனமாய் இன்பம் மாண்டு விடுதலினால்

குறள் 61

"பெண்ணின் பெருந்தக்க யாவுளகற் பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

இராகம் :- மத்யமாவதி தாளம் :- ஆதி

பல்லவி

எப்பொருள் மிக்கதிங்கே? - உலகினில்
கற்பொடு கூடிய காதலியினும் வாழ்வில்

அனுபல்லவி

இப்புவிதனிலே இல்லறம் ஆற்றுவான்
பெற்றிடும் பெண்ணாகும் பெரும் அரும் பொருளினும்

சரணம்

அறம் பொருளின்பம் ஆற்றுதற் கேதுவான
திறம் பெற்றுக் கற்பாம் திண்மையும் பெற்று என்றும்
அறநெறி தவறாத அன்பே உருவான
நறுங்குணத்தோடமையும் நாயகியினும் பாரில்

குறள் 62

"தெய்வம் தொழாஅள்கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

இராகம் :- கமாஸ் தாளம் :- ஆதி

பல்லவி

பெய்எனப் பெய்யும் மழை - கணவனைத்
தெய்வமெனத் தொழுவாள் பெய் மழையே இங்கு

அனுபல்லவி

வையகத்தில் வாழும் இல்லற வாழ்வில் பிற
தெய்வத்தையே தொழாத் தூயவள் மழையினைப்

சரணம்

மெய்யன்புடனே தன்னை மேவும் கணவனோடு
செய்யும் அறங்கள் பல சிறப்புற ஆற்றி என்றும்
கையும் மெய்யும் குவித்து கணவனைத் தொழுதெழும்
தையலவள் கற்பின் தனிப் பெரும் மகிமையால்

குறள் 63

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித்தகை சான்ற
சொற் காத்துச் சோர்விலாள் பெண்"

இராகம் :- மார்க்கஹிந்தோளம் தாளம் :- ஆதி

பல்லவி

அவளே பெண்ணாம் - அவனியினிலே
தவறாக் கற்போடு கணவனைப் பேணும்

அனுபல்லவி

புவனியினிலே மனையற மாண்பின்
புகழ்காத்தறங்கள் புரிந்திடுகின்ற

சரணம்

பாரினிலே இன்பப் பதியோடு வாழ்ந்து
யாரிடமும் அன்பும் ஆதரவும் பூண்டு
பேரறம் புரியும் போதிடர் வரினும்
சோர்வில்லாமல் நல்ல வாழ்வு நடத்துகின்ற

குறள் 64

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை"

இராகம் :- மாண்டு தாளம் :- ஆதி

பல்லவி

பெண்களை அடிமையாய்ப் பேணிடும் கணவர்கள்
பெற்றிடும் பயன் யாது? - வாழ்வில்

அனுபல்லவி

மண்புகழும் மனை மாண்பு நிறைந்த நல்ல
பண்புகளை மனைவி பாதுகாப்பாளாகில்

சரணம்

கற்பெனும் கண்ணிய பொற் பூணணிகளை
நற்றிற மாய்க்காக்கும் அத்திறம் படைத்த
சற்குணவதிகளின் நற்குணப் பண்பே
இப்புவி வாழ்விலே ஒப்பிலாச் சிறப்பதாம்

குறள் 65

"பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

இராகம் :- சகானா தாளம் :- ஆதி

பல்லவி

தேவ உலகில் வாழும் தேவர்களும் அங்கு
பேணிச் சிறப்பாகப் போற்றிடுவார் என்றும்

அனுபல்லவி

காதலும் தான்கொண்ட கற்பும் தவறாமல்
காதலனைத் தினம் கைதொழும் பெண்ணினை

சரணம்

கொண்டிடும் கணவனைத் தன் தெய்வமெனக்கொண்டு
கண்டிடுமின்பமெல்லாம் களித்தவனோடு கண்டு
எண்ணரும் புகழ் மணக்க எழிலாய் அறங்கள் செய்து
மண்ணுலகில் இல்வாழ்வு மாண்தரும் மனைவியை

குறள் 66

"புகழ்புரிந் தில்லிலோர்க்கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடுநடை"

இராகம் :- ஜெகன்மோஹினி தாளம் :- ஆதி

பல்லவி

பேரும் புகழ்விரும்பப் பெறாத இல்லாள் அவளால்
பாரில்க் கணவன் தன் வீரமிழந்திடுவான்

அனுபல்லவி

யாரும் இகழும் போது வீறுகொண்டெழும் அந்த
ஏறுபோல் பெருமித எழில் நடையை இழப்பான்

சரணம்

வாழ்வினில் நற்புகழை நாடிடா இல்லாளை
வாழ்க்கையில் துணையாய் ஏற்றிடும் கணவன்
தாழ்வுறச் சொல்வார் முன் தலைகுனிந்தே அவன்
ஏழ்மையாய் நாணம் எய்திடுவான் என்றும்

குறள் 67

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன் மக்கட்பேறு"

இராகம் :- தேவமனோஹரி தாளம் :- ஆதி

பல்லவி

மங்கலம் என்பது மனைவியின் மாண்பே
பொங்கும் களிப்புடனே புரியுமில்வாழ்வினிலே

அனுபல்லவி

மங்கலமான மனைவியின் மாண்பின்
நன்கலமாய் மக்கள் நற்பேறமைந்திடும்

சரணம்

நல்ல குணம் படைத்து நற்செயல் செய்யுமந்த
வல்லமையுடைய வாழ்க்கைத் துணைவிதான்
கொள்ளும் மங்கள வாழ்வில் குணமுள்ள மக்களை
கொள்ளும் பெரும்பேறு நல்லணியாய் அமையும்

குறள் 68

"பெறுமவற்றுள் யாமறிவ‌தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

இராகம் :- ஜோன்புரி தாளம் :-

பல்லவி

இல்லற வாழ்வினில் கொள்ளும் எப்பேறினும்
நல்ல மக்கட்பேறே சொல்லரிய பேறாம்

அனுபல்லவி

பல்வித பேறுகள் பெற்றும் புதல்வரை
இல்லாத பேறுகள் இருந்து வீணாதலால்

சரணம்

பெறும் மக்கட் பேறினும் பேரறிவோடுலகில்
பெரிது சிறிதெனப் பேரறிவால் அறியும்
பெருங்குணப் புதல்வரைப் பெற்றிடும் பேறல்லால்
மறுபிறபேறினை மதிப்பதில்லை உலகில்

குறள் 69

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

இராகம் :- தர்பார் தாளம் :- ஆதி

பல்லவி

துன்பமும் துயர்களும் தீயவை யாவுமே
என்றும் அவர்களைத் தீண்டாதே - கொடும்

அனுபல்லவி

அன்பிலாச் சொற்களால் ஆடும் பழித்திடாத
பண்பு நிறைந்த நல்ல பாலரைப் பெறுபவர்

சரணம்

செய்த வினையதனால் சேர்பிறப் பேழினிலும்
எய்திய போதிலும் தான் எய்தாதே தீயவைகள்
துய்ய மனதுடைய தூயோர்கள் எல்லோரும்
செய்யும் இல்லறத்தில் நற்சேய்களைப் பெறுதலால்

குறள் 70

"தம் பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்
தந்தம் வினையான் வரும்"

இராகம் :- ஸ்ரீரஞ்சனி தாளம் :- ஆதி

பல்லவி

எம்அரும் பொருளென எண்ணி அறிவுடையார்
தம்புதல்வர் தமை அன்புடன் காத்திடுவார்

அனுபல்லவி

நம்பெரும் பூமியில் நாடிடும் இல்வாழ்வின்
இம்மையும் இன்பம் மறுமையிலும் தரும்

சரணம்

பெற்றிடும் புதல்வரின் பெரும் பொருளாயவை
பெற்றவர்களுக்கென பேணி உலகினில்
நற்புதல்வர் என்றும் நாடிடும் நல்வினை
பற்றுடனே வந்து பற்றிடுமாதலால்

குறள் 71

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

இராகம் :- காமவர்த்தனி தாளம் :- ஆதி

பல்லவி

அமிழ்தமும் நிகராமோ - சுவையில்
புதல்வர்கை அளாவிடும் புனித உணவுக்கு

அனுபல்லவி

எளியவர் உண்டிடும் ஏழ்மைக் கூழாயினும்
கனியப் புதல்வரின் கைபட்டு இனிப்பதால்

சரணம்

நாவாலும் கையாலும் நாடித்தொட்டுக் கவ்வும்
கூழாமே சிறந்தது குழந்தைகை படுவதால்
சாவாதவரம் பெற்றுச் சாத்வீக வாழ்வு பெற்ற
தேவாதி தேவர்கள் தேடி எடுத்துண்ட

குறள் 72

"மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற் கேட்டல் இன்பம் செவிக்கு"

இராகம் :- உசேனி தாளம் :- ஆதி

பல்லவி

மெய்யான இன்பம் பெறுவார் - தம்மக்கள்
மெய்யாம் மேனியில் மேவித்தீண்டும் போது

அனுபல்லவி

வையக வாழ்வினில் வாய்த்திடும் புதல்வரைக்
கையதனால் தீண்டி கட்டி அணைக்கும் போது

சரணம்

இன்பமே உருவான இனிய புதல்வரின்
இன்சொல் இருசெவியும் இன்புறக் கேட்டிடுவார்
அன்பு குழைந்திடும் அச்சிறு மதலையின்
இன்பமே இன்பமென இன்புற்று என்றுமவர்

குறள் 73

"குழலினி தியாழினி தென்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

இராகம் :- யமுனாகல்யாணி தாளம் :- ஆதி

பல்லவி

குழலும் யாழும் இனியதென்பார் - தமது
குழந்தைகளின் இன்பக் குதலைமொழி கேளாதார்

அனுபல்லவி

மழலை மொழிகள் பேசி மகிழ்வுடன் கொஞ்சிடும்
மக்களின் அன்பது மிக்கிடும் சொல்லறியார்

சரணம்

குழலில் பிறந்திடும் குளிர்மையாம் நாதத்திலும்
குழைந்து மீட்டும்யாழில் கூடிடும் கானத்திலும்
மழலை மென்மொழி பேசும் மதலைக் குழந்தையே
குதலை மொழியால் இன்பம் கொடுப்பதைத் தெரியாமல்

குறள் 74

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

இராகம் :- ஆபோகி தாளம் :- ஆதி

பல்லவி

பெற்றவர் பெரும் செயலே - உலகில்
மற்றவரனைவரும் மக்களைப் புகழ்வது

அனுபல்லவி

கற்றுணர்ந்து கல்வி பெற்ற பெரும் சபையில்
கற்றவர் மதித்திட மற்றார் முன்னாக்குவது

சரணம்

தந்தை உலகினில் தனையருக் காற்றிடும்
நன்றியும் கடமையும் நல்லவனாக்கி என்றும்
எந்த நற்காரியமும் எடுத்தாற்றுவரினுள்
முந்தி முதல்வனாகப் புதல்வனை ஆக்குதல்

குறள் 75

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

இராகம் :- சௌராஷ்டிரம் தாளம் :- ஆதி

பல்லவி

தம்மினும் தமது தனையரறிவுடைமை
இம்மாநிலத்தில் இருப்போர்க்கினியதாம்

அனுபல்லவி

நன்னிறையறிவுடை மன்னுயிரெல்லாம்
தன்னிலும் கூடிய தகைமையோடு வைப்பதால்

சரணம்

பெற்றார் அனைவரும் பெற்ற தம்மக்களின்
பேரறிவை மெச்சிப் பெருமிதம் கொண்டாலும்
கற்றார் அனைவரும் அப்புதல்வர் அறிவை
உற்று உணர்ந்து இன்பம் பெற்றிடுவாராதலால்

குறள் 76

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

இராகம் :- சுபபந்துவராளி தாளம் :- ஆதி

பல்லவி

பேரின்பம் எய்திடுவாள் - பெற்றதாய்
பெற்ற போதிலும் மகன் மிக்கவன் எனக் கேட்கப்

அனுபல்லவி

பாரின் கண்யாவரும் பாராட்டித் தன்மகனை
பேரறிவாளன் அவன் பெரியவன் எனக் கேட்கப்

சரணம்

ஈன்ற பொழுது மாதா ஈடில்லா மகிழ்வெய்தல்
போன்ற உவகையிலும் பெரிதும் உவந்திடுவாள்
சான்றோன் தன்மகன்என சகலரும் போற்றுதலைத்
தான்கேட்ட தாயவள் தரணியில் நிகரிலாப்

குறள் 77

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்"

இராகம் :- ரீதிகௌளை தாளம் :- ஆதி

பல்லவி

நன்மகன் என்றும் தன்பிதா மகிழ
நன்கு நடப்பதே நல்லற நெறியாம்

அனுபல்லவி

என்ன தவம் செய்து பெற்றான் இப்புதல்வனை
என்று உலகினிலே எல்லோரும் சொல்லிட

சரணம்

இந்தப் புதல்வனை ஈன்றெடுக்கப் பிதா
என்னமாதவம் செய்து எய்தினான் என்னும் சொல்
தந்தை மகிழ்ந்திட தனையன் இவ்வுலகினில்
சிந்தை குளிரவே செய்தாற்றும் உதவியாம்

அன்புடைமை அதிகாரம் 8

குறள் 78

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

இராகம் :- பௌளி தாளம் :- ஆதி

பல்லவி

அன்பின் திறன்களை அடைத்திடும் தாழது
இந்த உலகில் உண்டோ?

அனுபல்லவி

அன்பு செய்திடுவார்க்கு வந்திடும் துயரும்
துன்பமும் கண்டிரங்கும் தூய உள்ளத்தில் தோன்றும்

சரணம்

இன்பமே உருவான அன்பு நிறைந்தவர்
துன்பமதைக் கண்ட தூய உள்ளத்தில் நின்றும்
கண்ணீர் உருவாகி மண்ணில் விழும் அன்பு
கண்ணியமான தன் திண்மையைக் காட்டுதலால்

குறள் 79

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

இராகம் :- கௌளை தாளம் :- ஆதி

பல்லவி

அன்பு நிறைந்தவரை அனைவரும் அவனியில்
என்னுடையார் என ஏற்றிடுவார் என்றும்

அனுபல்லவி

என்பினால் ஆகிய எளிய தம்உடல்தன்னும்
அன்பருக்கே அளித்து ஆருயிர் ஈயும்நல்

சரணம்

இந்த உலகினில் இருப்பவர்க்குதவாது
அன்பிலார் என்றும் அவர்க்கே உரியவராம்
எந்த உயிரையும் சொந்த உயிரதாய்
சிந்தையில் மதிக்கும் சீரிய பண்பமைந்த

குறள் 80

"அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடியைந்த தொடர்பு"

இராகம் :- மால்கோஸ் தாளம் :- ஆதி

பல்லவி

உடலோடியைந்த உயிர் அன்பு புரியும்
திறனதை ஆற்றிடத் தொடர்பது உளவே

அனுபல்லவி

உடலும் உயிரதும் உண்டாக்கும் அன்போடு
அறநெறிசேர் பயன் அன்புடைமையாகும்

சரணம்

உயிர்கள் உடலோடு உண்டாக்கிடும் அந்த
இயல்பான தொடர்பினை உயர்வான அன்பின்
நயமோடு பொருந்திடும் நல்ல நெறியதன்
பயனெனப் படித்தவர் பகன்றிடுவார் என்றும்

# திருக்குறட் கும்மி
# கடவுள் வாழ்த்து

இராகம் :- ஆனந்தபைரவி தாளம் :- ஆதி

1. அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு எனப்
பகரும் உலகிற்கே முதல்வனான ஆதி
பகவனை வாழ்த்தியே கும்மியடி

2. கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின் நானிலத்தில்
கற்ற பயன் வேண்டின் காசினியில் இறை
பொற்கழல் வாழ்த்தியே கும்மியடி

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடூழி வாழ்வாரன்றோ!
உலகினில் நீடுழி வாழ்ந்திட இறையவன்
மலரடி வாழ்த்தியே கும்மியடி

4. வேண்டுதல் வேண்டாமை இலாணடி சேர்ந்தார்க்கு
யாண்டுமே இடும்பை இல்லையென்றே
ஆண்டவன் விருப்பு வெறுப்பிலா இறைபதம்
மாண்பினை வாழ்த்தியே கும்மியடி

5. இருள்சேர் இருவினையும் சேராது இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு
இருவினைகள் என்றும் சேராது இறைவன்
திருவடி வாழ்த்தியே கும்மியடி.

6. பொறிவாயில் ஐந்துவித் தான்பொய் தீர்ஒருக்க
நெறி நின்றார் நீடுழி வாழ்வாரன்றோ!
பொறி ஐந்தை அடக்கிப் பொய் இல்லா ஒழுக்க
நெறி சென்று வாழ்த்தியே கும்மியடி

7. தனக்குவ மையில்லான் தாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றல் அரிதாகையால்
தினக்கவலை நீக்க இணைக்கு நிகரில்லான்
இணைக்கழல் வாழ்த்தியே கும்மியடி

8. அறஆழி அந்தணன் தான் சேர்ந்தார்க்கு அல்லால்
பிற ஆழி நீந்தல் அரிதாகையால்
இறை பதம் படகினை பிறவிக் கடல் தாண்ட
உறுதுணையாய் வாழ்த்திக் கும்மியடி

9. கோள்இல் பொறியிற் குணமில எண்குணத்தான்
தாளை வணங்காத்தலை எனவே
நாளும் ஐம்பொறிகள் நற்குணம் தருவானின்
தாளை வணங்கியே கும்மியடி

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தாராகையால்
இறையடி எண்ணியே பிறவிக்கடல் நீந்தும்
நெறிமுறை வாழ்த்தியே கும்மியடி

# திருக்குறட் கோலாட்டம்
## வான் சிறப்பு

இராகம் :- பெஹாக் தாளம் :- ஆதி (திஸ்ரகதி)

1. வான்சிறப்பைப் போற்றி நாமும் கோல்கள் ஆடுவோம்
வள்ளுவனார் திருக்குறள் சொல் பாடிடுவோமே - திரு
தான் அமுதம் என உணர்த்தும் தன்மை நிறைமழை
தரணிதனை நிலை பெறவே செய்யும் அமிழ்தமே

2. உண்டுகளிக்கும் இந்த உலகினில் உணவினையே
உண்டாக்கி உளவாக்கி உண்பித்து உவகை காட்டி
உண்பார் உண்ணீரதாய் உணவாகி உண்ணப்படும்
உண்மை உத்தம உருத் தண்ணீர் மயமான

3. விண்மழை உலகினிலே வீழாது பொய்த்துவிடில்
மண்ணுலகில் பஞ்சம் பிணி பரந்து நிலை பெற்றிடுமே
தண்ணீர் இன்றி உயிர்கள் தவித்தே துன்பமுறும்
வண்ணமுற மாரிபெய்தே வாழ்வு தரும் மழையான

4. வானிருந்து பெய்யாமல் கெடுப்பதுவும் மாமழையே
வையகத்தை வளமாக்கிக் கொடுப்பதுவும் மாமழையே
தானிறங்கித் தாரணியை வாழவைப்பதும் மழையே
தரணிதனில் சொரியாமல் அழிப்பதுவும் மாமழையே

5. மழைத்துளி வீழாது விடின் மண்ணில் ஒரு புல் நுனியும்
தழைத்துத் துளிப்பதுவும் தரணியிலே மிக அரிது
பிழைத்திடும் உயிரகளையும் பிறவையும் உலகினிலே
வளர்ந்திடவே வாய்த்திடும் வானின் அருள் என்னும்

6. பெரிய மழை உலகினிலே பெய்யாது விடில் பெரும்
கரிய கடல் தன்னியல்பு குறைந்தே அழிந்து விடும்
அரிய கடல் ஆவியாக மேகமாக மழையாக
சொரிதலின்றேல் அவனியது சோபித்தல் அரிதன்றோ

7. வானம் வரண்டிடுமேல் வானவர்களுக்குச் செய்யும்
பூசனைகள் சிறப்புடனே புரிந்திட முடியுமோ?
தேனமுதாம் மழையின்றேல் தேவ பூஜை இங்கு ஏது?
தெய்வ பூஜை செய்திடவும் சொரியுமழை வேண்டுவதே

8. வானமது இரங்கியே வழங்கிடும் மழையின்றேல்
தானம் தவமிரண்டும் தங்காது உலகினிலே
மானிலத்தில் மழை இன்றேல் மாதவமும் தர்மம் ஏது
நானிலத்தோர் யாவருக்கும் ஞானியர்களும் வேண்டுவன

9. நீரில்லாமல் உலகமது நிலைத்து அமையாது குளிர
நீரதுவும் வானின் மழை இன்றி வழங்காது
பாரினிலே யாவருக்கும் பாருலகு தானதற்கும்
மாரிமழை இன்றியமையாது ஆதலினாலேயே

# கவிதை மலர்

இராகம் :- தேஷ் தாளம் :- ஆதி

பல்லவி

தமிழில் மலர்ந்த கவிதை மலர்களின்
கமழ்மணம் நுகர் தமிழா - செந்(தமிழ்)

அனுபல்லவி

சுகமெனும் சொல்லின் பொருளது காண்பாய்
இகபரம் தனிலே இனிமைமிகும் - செந்(தமிழ்)

சரணம்

கம்பன் கவி மலர் இன்பம் தரும் - இந்த
அம்புவியில் வாழ்வு அழகுறச் செய்யும் குறள்
எம் பாரதத்தாய் எழில் காண்பாய் பாரதியில்
பம்பர உலகினில் பரந்திடும் நமதுயிர் (தமிழ்)

# தமிழ்த்தாயின் புகழ்

இராகம் :- ஹம்ஸானந்தி தாளம் :- ஆதி

பல்லவி

எத்தனை ஆயிரம் தான் கற்ற போதிலும் மொழி
அத்தனையும் நம்தமிழ் அன்னைக்கு நிகராமோ

அனுபல்லவி

முத்தமிழ் அன்னையின் முற்புகழ் இப்புகழ்
அத்திறம் தன்னை அறியாமலே நாம் - (எத்தனை)

சரணம்

கற்றிடும் போது கணக்கிலா இன்பம் தரும்
நற்றிறம் படைத்த நம் தமிழ்த் தாயவள்
பெற்ற தாயினும் பிறந்த பொன்னாடினும்
மிக்குடையாள் அவளை ஏற்றிவிட்டே நாம்

# தமிழின் சுவை

இராகம் :- ஸிந்துபைரவி　　　　தாளம் :- ஆதி

பல்லவி

என்னவென்றியம்பிடுவேன் - எங்கள்
இன்பத் தமிழின் நன்மிகும் சுவையை

அனுபல்லவி

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழின்
நயமிகும் திறமையும் நல்ல இயல்பையும் - (என்ன)

சரணம்

கம்பனின் கவியமுதை - அவனின்
காவிய நயருசியை
பண்புறும் குறள் ரசத்தை - இன்னும்
நண்ணில் நயம் தரும் நாலடியை (என்ன)
திருப்புகழ் அமிர்தமும்
திருப்பண்களும் இன்னும்
திருவாசகத்திலும்
தீந்தமிழ் இசையை (என்ன)

# வீரத்தமிழ் மகன்

இராகம் :- சாமா தாளம் :- ஆதி

பல்லவி

வீரத்தமிழ் மகனாய் வா - உந்தன்
வீரத்தைக் கண்டு விண்ணவர் வியக்கவே

அனுபல்லவி

அன்பெனும் அஹிம்ஸை ஆயுதம் தாங்கி
வன்பெனும் கொடிய அரக்கனை மாய்க்கும்

சரணம்

ஏராளும் உன்கையைப் போலே
எங்குமுண்டோ புவிமீதே
பாராளும் மன்னர்கள் தானும்
பயந்து நடுங்கிடப் பாரினிலே நீ

# வாழ்க்கையில் வெற்றி

இராகம் :- காபி		தாளம் :- ஆதி

பல்லவி

வாழ்க்கையில் வெற்றியை அடைவது திண்ணமே
வாழ்ந்தோர் உறுதியைக் கடைப்பிடித்தால்

அனுபல்லவி

உண்மையே பேசி உறுதியுடனே - மனத்
திண்மையுடனே வீரதீரனாய் வளர்ந்தால்

சரணம்

சத்தியமும் பொறை ஸாந்தமும் வேண்டும்
பக்தியும் தேசத்தில் வைத்திருக்கவே வேண்டும்
கத்தியும் வேண்டாம் கருணையே போதும்
சக்தியித்தனையும் சார்ந்திருந்தாலே

# வாழிய செந்தமிழ்

இராகம் :- பூர்விகல்யாணி தாளம் :- ஆதி

பல்லவி

தும்பிக்கையனே துணையே - என்ற
நம்பிக்கையோடுனை நாம் துதித்திடுவோம்.

அனுபல்லவி

நம்பியுனையென்றும் கும்பிடுவாரவர்
தம்வினை தீர்த்து தண்ணருள் புரியும்

சரணம்

மந்திர ஓங்கார மாபெரும் வடிவே
தந்திடுவாய் அருள் நன்குநாம் வாழவே
முந்தியே யாவுக்கும் முதல்வனே - நர்த்தன
தொந்தி குலுங்கிடத் தோம்தோமென்றாடி

இராகம் :- ஷண்முகப்ரியா தாளம் :- ஆதி

பல்லவி

அனாதரஷகனே அம்பிகை புதல்வனே
உனாதரவின்றி நானும் உய்வேனோ - உலகில்

அனுபல்லவி

விநாயகராஜனே விக்னஈஸ்வரனே
எனை வாழ்வினிலே என்று மேகாப்பாய்

சரணம்

நாமகள் வீணையில் நாதம் எழுப்பிட
பூமகள் பூரித்துப் பூமாரி சொரிந்திட
மூஷிக வாகனம் முன்னே இருந்திட
மோதகம் உண்டிடும் முதல்வனாம் புதல்வனே.

இராகம் :- பிலஹரி தாளம் :- ஆதி

பல்லவி

இறைவனை வணங்கிடுவோம் - எங்கள்
இருதயக் கோவிலுள் இருந்து இலங்கிடும்

அனுபல்லவி

முறை தவறாமலென்றும் முக்கரணசுத்தி
நிறைமையோடனு தினம் நில வாழ்வினில் நாமே

சரணம்

நற்குணப் பண்புகளால் நானில வாழ்வினிலே
சற்குணச் செய்கையெல்லாம் சகலருக்கும் புரிந்து
பொற்பதமென்றடியார் போற்றுமிறைவனது
நற்பதத்தையடைந்து நல்ல வாழ்வு பெறவே.

இராகம் :- ஹம்ஸானந்தி தாளம் :- ஆதி

பல்லவி

அருள் தருவாய் அம்மா - என்றும்
பொருளுணர்ந்து நின்னைப் போற்றிக் கவிபுனைய

அனுபல்லவி

அருமையும் திறமையும் அழகும் ததும்பநின்
பெருமைகளை யெல்லாம் எளியேன் எடுத்துரைக்க

சரணம்

செந்தமிழ் அன்னை நின் சிந்தை குளிரவும்
பைந்தமிழ்ப் பாக்களைப் பயனுறப் பாடவும்
நம்தமிழ் நாட்டினில் இன்பமே பொங்கவும்
எம்தமிழ் அன்னையே எம்மீதிரங்கியே.

இராகம் :- பாகேஸ்வரி தாளம் :- ஆதி

பல்லவி

கவிதைக் கன்னியவள் - என் தன்
கருத்தைக் கவர்ந்தாளம்மா

அனுபல்லவி

இனிய இசையில் நின்றே இன்பத் தமிழ்க் கண்ணால்
கனியச்சிமிட்டிக் கொண்டே கணக்கிலா இன்பம் தந்தாள்

சரணம்

எதுகையால் என்மனம் இன்புறத் தொட்டாள் மெல்ல
மோனையதரத்தினால் முத்தமிட்டாள் அவள்
நயத்துடன் பேசினாள் நான் என்ன சொல்வேன்
ஜெகத்தில் அவள் காதல் மறக்கவே மாட்டேனம்மா.

இராகம் :- கரகரப்ரியா தாளம் :- ஆதி

பல்லவி

எப்படியாகிலும் எந்தமிழன்னையின்
நற்பதம் நான் பிடிப்பேன்.

அனுபல்லவி

அப்பதம் பிடித்தால் அருள் தருவாள் அவள்
இப்புவி தன்னிலே இன்னிசை பெருக

சரணம்

திருக்குறளகத்தினில் திகழுவாள் அன்னை
திருவாசகம் தன்னில் திருநடம் புரிவாள்
அருந்தமிழறிஞரின் அறிவுப் பீடத்தில்
இருந்திடுவாள் அவள் எங்கிருந்தாலும்.

இராகம் :- பிலஹரி தாளம் :- ஆதி

பல்லவி

வேதனை தந்தென்றும் சோதனை செய்வதுன்
சாதனையோ ஈசா.... மன.....

அனுபல்லவி

போதனைகள் பல போதிக்கவே லோக
நாதனே நாம் செய்த தீவினை தீர்த்திட

சரணம்

தீயவினைகள் தமைத் தீர்க்கவே துன்பத் தீயுள்ப்
பாயவிட்டெம்மையெல்லாம் பதைத்திடச் செய்த பின்னர்
தூயவராக்கி இன்னும் துன்பமதையும் போக்கும்
மாயனே நாம் வாழும் வாழ்க்கையதில் பெரும்.

இராகம் :- பியாக் தாளம் :- ஆதி

பல்லவி

திக்குத் தெரியாமல் என்னை - வாழ்வில்
தத்தளிக்க விடலாமா? தேவி

அனுபல்லவி

எத்திசையும் அறியாமல் எந்தன்
புத்தி போன போக்கில் போயும்,
நற்றிசை ஒன்றும் காணாமல் சும்மா
வற்றிடமெல்லாம் வீணாய் அலைந்து

சரணம்

சக்தியே உலகினும் நித்தியப் பொருளே
பக்தியால் உனையே பாடித் தொழுது நின்று
கத்திக் கதறிக் கண்ணீர் விட்டழுகிறேன்
சித்தியே தரும் ஒரு யுக்தியேனும் கூறாயே.

இராகம் :- காபி தாளம் :- ஆதி

பல்லவி

வாழ்க்கையில் வெற்றியை அடைவது திண்ணமே
வாழ்ந்தோர் உறுதியைக் கடைப் பிடித்தால்

அனுபல்லவி

உண்மையே பேசி உறுதியுடனே மனத்
திண்மையுடனே வீர தீரனாய் வளர்ந்தால்

சரணம்

சத்தியமும் பொறை ஸாந்தமும் வேண்டும்
பக்தியும் தேசத்தில் வைத்திருக்கவே வேண்டும்
கத்தியும் வேண்டாம் கருணையே போதும்
சக்தியித்தனையும் சார்ந்திருந்தாலே.

இராகம் :- பிஹாக் தாளம் :- ஆதி

பல்லவி

வாழ்வினில் குறைகண்டு வசைகள் பலபேர் சொல்ல
மாழ்வது தான் மாந்தற்கழகாமோ - இப்புவி

அனுபல்லவி

ஏழ்மை நிலையை எய்தியிருந்தாலும்
தாழ்வுறும் போது தடுமாற்றம் கொண்டு

சரணம்

ஊழ்வினை என்று சொல்லி உள்ளத்தைக் கெடுத்த
சூழ்நிலையாலே மனச் சுத்தம் இழந்து திறம்
தோள் வலியும் கெட்டு தூய தன்மையிழந்து
பாழ்பட்ட ஜென்மம் படும்பாடு இதுவே என்று

இராகம் :- ஸிந்துபைரவி தாளம் :- ஆதி

பல்லவி

வருந்தாதே நெஞ்சே - வாழ்வினில்
பெருந்துயர்ப் பிணியினால் பீடித்துழன்றுலகில்

அனுபல்லவி

அருந்தலமெனும் திரு வான்மீகியூர் மேவும்
மருந்தீஸ்வரனருள் இருந்திடுமாதலால் நீ

சரணம்

தெய்வம் அவனெனவே தேடியடைந்து அவன்
துய்ய பதங்களையே துணையென நம்பியவர்
உய்ய வழியருளி உன்னத வாழ்வினையே
செய்யவருளுமீசன் மெய்யருளிருப்பதால்

இராகம் :- கரகரப்ரியா தாளம் :- ஆதி

பல்லவி

திரிபுரஸுந்தரி திருவருளால் இந்தப்
புவியினில் நாம் வாழுவோம் - என்றும்

அனுபல்லவி

திருவுறையும் தூய திருவான்மியூர் மேவி
உருவிலுறைந்து தினம் உள்ளன்புடனருளும்

சரணம்

காப்பதுன் பாரமம்மா என்றவள் மென்மைப்
பூப்பதங்களைச் சேர்ந்து போற்றிடும் புனிதர்கள்
கேட்பதற்கு முன்பே கேட்கும் வரங்களெல்லாம்
நாட்டமுடன் கொடுத்து நல்ல வாழ்வுமருணும்

இராகம் :- ஸ்ரீரஞ்சனி தாளம் :- ஆதி

பல்லவி

கயிலையை நீங்கிக் கபாலீஸ்வரர் இந்த
மயிலையிலுறைகின்ற மர்மமென்னடி தோழி?

அனுபல்லவி

குயிலைப் பழிக்கும் குரல் கோதை கற்பகவல்லி
கயலைப் பழிக்கும் கண்ணால் மயிலைக் கொடுத்தானோடி?

சரணம்

சிற்பரயோகியர் சித்தர்கள் ஈசனின்
நற்பதம் நாடியே நற்றவமியற்றிடும்
பொற்பதியாம் அந்த வெற்பதனை விட்டுக்
கற்பகவல்லி மேல் காதல் கொண்டாரோடி?

இராகம் :- ஸாருகேசி தாளம் :- ஆதி

பல்லவி

தாயே நான் உந்தன் சேயல்லவோ அம்மா
தண்ணருள் தந்தருள்வாய் திரிபுரஸுந்தரி

அனுபல்லவி

மாய உலகினில் மனித ஜென்மமெடுத்தேன்
தூய நல்வாழ்வளிப்பாய் துணையுனை நம்பினேன்

சரணம்

சங்கரி சாம்ப சதாசிவ நாயகி
மங்கள நாயகி மாயனின் சோதரி
எங்கணும் சக்தியாய் இலங்கிடும் ஜோதி நின்
பங்கஜ மலர்ப்பாதம் பற்றினேன் பார்வதி

இராகம் :- மாயாமாளவகௌள தாளம் :- ஆதி

பல்லவி

எங்கெங்கெல்லாமோ தாவுது - மனக்குரங்கு
அங்கங்கெல்லாம் தொங்கிப் பங்கம் விளைக்குது

அனுபல்லவி

திங்கள் கங்கையோடு திரிசூலம் ஏந்துமீசன்
பங்கயப் பாதமலர் பற்றிப் பிடித்திடாமல்

சரணம்

மண்ணாசை பொன்னாசை பெண்ணாசையில் புரண்டு
நண்ணாதிறைவனடி நாடாமல் திரியுது
விண்ணாளவினை போக்கும் விதமொன்றுமே செய்ய
எண்ணாமல் திக்கெல்லாம் ஏறிஏறிப் பாய்ந்து

இராகம் :- தேஷ் தாளம் :- ஆதி

பல்லவி

செந்தாமரையில் திகழும் திருவே
உன் பாதமலர் உலகில் துணையே

அனுபல்லவி

வந்தானந்த மழையாய் சொரிந்து
இந்தாவெனவருள் ஈந்திடுவாயே

சரணம்

அழகுக்கழகாய் அமைவாய் தாயே
உலகுக்குலகாய் உறைவாய் நீயே
பலரும் போற்றிப் பணியும் தூயே
வளரும் செல்வம் வழங்கும் மாயே

இராகம் :- ஹம்ஸானந்தி தாளம் :- ஆதி

பல்லவி

எம்பிழை பொறுத்தருள்வாய் - தாயே
அன்பினால் அணைத்தெமை ஆசீர்வதித்தென்றும்

அனுபல்லவி

தும்பம் தருமெங்கள் தூயதன்மை இல்லா
வன்பு நிறைந்த மனம் வாக்கு காயத்தால் செய்யும்

சரணம்

கல்வியின் கடலே கருணையின் உருவே
நல்விதமாக நாம் நடந்திட அருளே
வல்வினையால் வருந்தி வாழ்வில் கெடாது செல்வச்
செல்வியினருளும் செறிந்திடச் செய்து என்றும்

இராகம் :- பாகேஸ்வரி தாளம் :- ஆதி

பல்லவி

வீண்கோபம் கொள்ளாதே மனமே - உலகில்
மாண்பு நிறைந்த ஓர் மனிதனாய் வாழும் நீ

அனுபல்லவி

காண்பவர் யாரிடமும் கருணையுடனே அன்பு
பூண்டென்றும் ஒழுகிடும் புனித உள்ளத்தினால் நீ

சரணம்

இன்பமாய் வாழவே அன்பு ததும்புகின்ற
இன் சொல்லையே நீ இயம்பிடுவாய் என்றும்
துன்பமாம் கொடுஞ்சொல் தூயோர் வருந்திட
வன்புடன் சொல்லி வாழ்வது தகுமா?

இராகம் :- காம்போதி தாளம் :- ஆதி

பல்லவி

கொண்டாடி நாம் பாடுவோம் - எல்லோரும்
வெண்டாமரை தனில் விளங்கிடும் வாணியை

அனுபல்லவி

கண்டாரைக் கலைஞராய்க் கவிஞராய் அறிஞராய்
உண்டாக்கி ஊக்கிடும் உத்தமத் தெய்வத்தை

சரணம்

அன்னத்தின் மீதேறி அமர்ந்து வருவாள் வண்ண
கன்னங்கள் குழியக் களிப்பினைக் காட்டுவாள்
வன்னமலர்க் கையால் வாசித்து வீணையின்
இனை முதல் தரும் இன்பக் கலைமகளைக்

இராகம் :- பீம்பிளாஸ் தாளம் :- ஆதி

பல்லவி

இன்பம் பிறந்ததம்மா - எந்தன்
துன்பம் பறந்ததம்மா - வாழ்வில்

அனுபல்லவி

என்றும் இம்மானிலத்தில் எதிர்த்து இடரனைத்தும்
வென்று உலகினிலே வீரனாய் வாழ்ந்திடுமவ்

சரணம்

அன்பும் அவறிம்ஸையையும் ஆயுதமாய்த் தாங்கி
வன்பெனும் கொடியானை வதைத்து விட்டேனம்மா
எங்கும் சாந்தியும் சற்குணமும் நிரம்ப
பொங்கும் களிப்புடன் போற்றிடும் அன்பினால்.

இராகம் :- ஸிந்துபைரவி தாளம் :- ஆதி

பல்லவி

சோர்வடையாதே நெஞ்சே - பல
சோதனைகள் உனக்கு வேதனை தந்தாலும்

அனுபல்லவி

பாரினில் துன்பமும் துயரும் உன்னை வந்து
சீரழித்தாலும் நீ சிறிதளவேனும் மனம்

சரணம்

ஆயிரமாயிரம் தோல்விகள் வந்தாலும்
நாயினும் கேடாக நாடுவார் பழித்தாலும்
நீயுறுதி கொண்டு வாழ்வில் முன்னேறிட
காரியம் ஆற்றையில் கடும் துன்பம் வந்தாலும்.

இராகம் :- மார்க்கஹிந்தோளம் தாளம் :- ஆதி
(சலமேலரா)

பல்லவி

சலமேலரா என்ற மெட்டு
வருவாரடி தருணமிதுவே

அனுபல்லவி

தருவாரடி திருவாயால் முத்தம்
மருவியே என்னை மகிழ்விக்க நாதன்

சரணம்

தெருவோரம் நின்று தேடித்தேடியவர்
பருவம் நிறைந்த பாவை என்னைப் பார்க்கும்
கருவிழிகளின் காந்த சக்தியினால்
வருவேனிப்போ நான் வருவேனென்றவர்

இராகம் :- ஹிந்தோளம் தாளம் :- ஆதி

பல்லவி

தாயே தந்திடுவாய் - அருள்
சேயெனைக் காத்திடுவாய்

அனுபல்லவி

மாய உலகினில் மக்கள் மடமை போக்கித்
தூய உலகதாய் துலக்கிடும் சக்தியே

சரணம்

நாயாகி வைக்கோற்போரில்
நற்பசு நாடக் கெளவும்
பேயாம் மனம் படைத்த
பேயரைச் சீர்திருத்தி

ஈயாத குணம் போக்கி
இறுமாப்பதையும் நீக்கி
மாயாத அன்பு வாழ்வு
மானிலம் தன்னில் வாழ

இராகம் :- காமஸ் தாளம் :- ஆதி

பல்லவி

வாரும் கபாலீஸ்வரா - வந்து
தாரும் எனக்கின்பமே - வாரும் (வாரும்)

அனுபல்லவி

நீரும் மௌனம் சாதிக்க
நிலாவும் நெருப்பாகுதே
பாரும் இப்பாவை துன்பம்
பார்த்தேயாகிலுமுடன்

சரணம்

பவனி வருகையிலே
பார்த்து மோஹம் கொண்டேனே
அவனியில் உன்மீதிலே
அழியாக்காதல் கொண்டேனே
புவனியிலே மயிலாப்
பூரில் உறைபவனே
கவனித்து வந்திடுவீர்
காதல் புரிந்திடவே - வாரும் (வாரும்)

இராகம் :- ஸிந்துபைரவி தாளம் :- ஆதி

பல்லவி

என்னவென்றியம்பிடுவேன் - எங்கள்
இன்பத் தமிழின் நன்மிகும் சுவையை

அனுபல்லவி

இன்னமுத மென்பேனோ?
　　இனித்திடுந்தேனென்பேனோ?
கன்னித் தமிழவளின்
　　கனிமையின் இனிமையை

சரணம்

தமிழின் சுவையதை
　　தரணியில் உணர்ந்திடில்
அமிழ்தமும் நிகராய்
　　அமையுமோ? அன்பின்
கமழ்மணம் வீசிக்
　　கருணை பொலிந்து இன்பம்
தவழும் தன்மை நிறைந்து
　　தாய்மொழியின் பண்பை

இராகம் :- ஹம்ஸானந்தி　　　தாளம் :- ஆதி

பல்லவி

அலங்காரமாக இருந்தாள் - தமிழன்னை
நலங்காண நாடுவார் மனங் குளிர்ந்திட அன்று

அனுபல்லவி

இலங்கிடும் சிந்தாமணி மேகலையும் புனைந்து
துலங்கும் கேசத்தினோடு குண்டலமும் விளங்க

சரணம்

சில்லெனக் கால்களிலே சிலம்பதிகாரஞ் செய்ய
மெல்ல அகப்புறத்தின் மேலே நானூறு மின்ன
நல்ல குறளாய்ப் பொட்டு நடுவே நின்று திகழ
வல்ல கருணைத்திரு வாசகம் சொல்லிக் கொண்டு

# ராகமாலிகா

இராகம் :- ஆனந்தபைரவி தாளம் :- ஆதி

பல்லவி

கற்பகவல்லி நின் பொற் பதங்கள் பிடித்தேன்
நற்கதியருள்வாயம்மா - தேவி

அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதிமயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட

சரணம்

1. நீயிந்த வேளையினில் நீசன் என்னை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌனமம்மா ஏழையெனக்கருள
ஆனந்தபைரவியே ஆதரித்தாளுமம்மா

(கற்பக)

கல்யாணி

2. எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாயிறைஞ்சியென்றும்
நல்லாக்கி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியேகபாலி காதல் புரியும் மந்த
உல்லாசியே உமா உனை நம்பினேனம்மா

(கற்பக)

## பாகேஸ்வரி

3. நாகேஸ்வரிதேவி நாயேன் எனைக் காப்பாய்
வாகீஸ்வரிமாயே வாராய் இது தருணம்
பாகேஸ்வரி தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரிநீயே உலகில் நீ துணையம்மா

(கற்பக)

## ரஞ்சனி

4. அஞ்சனமையிடும் அம்பிகே எம்பிரான்
கொஞ்சிக்குலா விடும் வஞ்சியே நின்னிடம்
தஞ்சமென அடைந்தேன் தாயே உன்சேய் நான்
ரஞ்சனரகரிக்க கெஞ்சுகிறேனம்மா

(கற்பக)

இராகம் :- கானடா தாளம் :- ஆதி

### பல்லவி

சேயேன்படுமல்லல் அறியாயோ - அம்மா
தாயே நின்னருளின்றி உய்வேனோ - உலகில்

### அனுபல்லவி

நாயேன் ஐம்பொறிகளால் நானிலத்தினில் வீணே
மாயங்களிலே சிக்கி மதி மயங்கி உழன்று

### சரணம்

முற்ப வந்தனில் செய்த முழுவினை நீக்கியிந்த
அற்பன் எனக்கருளி ஆதரித்தாளுமம்மா
பொற்பதியாம் மயிலாப் பூரினில் வாழ்ந்திலங்கும்
கற்பகாம்பிகே உந்தன் கழலடியில் கதறும்

இராகம் :- பிலஹரி தாளம் :- ஆதி

பல்லவி

திருமாலும் பிரமாவும் உருமாறி யறியாத
உருவான ஜகதீசா பரமேஸ்வரா - அருள்

அனுபல்லவி

பெருமானே புவிமீதில் சிறியேனின் துணைநீயே
பெருவாழ்வு தருவாயே அடியேனுக் கருள்வாயே

சரணம்

எல்லாரும் போற்றிட எழில் மயிலாபுரியில்
உல்லாசமாயிருந்து உன்னடியார்க்கு என்று
நல்லாசிகள் அனைத்தும் நல்கும் தஷ்ணாமூர்த்தி
பொல்லாத சேயெந்தன் பிழைகள் பொறுத்தருள்வாய்

இராகம் :- ரஞ்ஜனி தாளம் :- ஆதி

பல்லவி

உன்னை நம்பியிந்த உலகில் உயிர்வாழும்
என்னையம்புவியினில் காப்பாயே - இறைவா

அனுபல்லவி

சென்னை நகரமதில் சேர் மயிலாபுரியில்
புன்னை மரநிழலில் பொலிந்திருந்து அருளும்

சரணம்

அல்லும் பகலுமுந்தன் அடியேன் இவ்வவனியில்
அல்லல்களினால் மன ஆறுதலின்றிப்படும்
தொல்லைகள் அனைத்தையும் தொலைத்து அருளும் உந்தன்
நல்லடிகள் பிடித்தேன் நானில வாழ்வினிலே

இராகம் :- பாகேஸ்வரி தாளம் :- ஆதி

பல்லவி

ஆடிடுவேன் உன்புகழ் பாடிடுவேன் உன்னை
நாடிடுவேன் தமிழ் நங்கையே உன்னுடன்

அனுபல்லவி

தேடிடுவேன் உன்னை தீந்தமிழ் நூல்களில்
கூடிடுவேன் நிதம் குவலயமீதினில் - (ஆடிடுவேன்)

சரணம்

இலக்கிய இதழ்களின் இன்சுவை பெறுவேன்
இதயம் மகிழ்ந்துகவி இன்பமாய் புனைவேன்
துலக்கிய கவிதையால் துன்பத்தை மறப்பேன்
துயரெனக்கில்லையுந்தன் துணையிருப்பதனால்

இராகம் :- பிஹாக் தாளம் :- ஆதி

பல்லவி

அற்புதக் காட்சியடி - தோழி
கற்பகவல்லியுடன் கபாலிவரும் பவனி

அனுபல்லவி

நற்புகழ் மயிலையின் நகர வீதிதனிலே
பொற்புது விடையின் மேல் பொலிந்து வலம் வருதல்

சரணம்

வேதங்கள் ஓதிடும் வேதியர் ஒரு பால்
கீதங்கள் பாடிடும் கின்னரா ஒரு பால்
நாதங்களியற்றிடும் நாதஸ்வரம் ஒருபால்
பாதங்களைப் போற்றும் பக்தர் சூழ வருதல்

இராகம் :- கல்யாணி தாளம் :- ஆதி

பல்லவி

கபாலீஸ்வரனென்றும் குலாவி மகிழ்ந்திடும்
கற்பகமே அருள்வாய்

அனுபல்லவி

சிவாய நமவென்று சிந்தை செய்பவர்க்கென்று
அபாயமில்லாமல் ஆண்டருளும் கருணை (கபாலீ)

சரணம்

தேமதுரத் தமிழில் தேவிநின் அருள்த்திரு
நாம மகிமையை நான் நவின்றிட வேண்டுமம்மா
மாமயிலாபுரியில் மகிழ்ந்துறை கற்பகமே
தாமதமில்லாமல் தனையனெனக் கருள்வாய்

இராகம் :- நாட்டைக்குறிஞ்சி தாளம் :- ஆதி

பல்லவி

நோய்க்கே இடங்கொடுக்க மாட்டோம் - எங்கள்
வாழ்க்கையிலே எமை வருத்தும் கொடியமன

அனுபல்லவி

மாய்த்தே மனிதரது மகிழ்வதனைக் கெடுக்கும்
பேய்க் கோலங்கொண்ட பல பெருங்கடும் பிணிகளாம்

சரணம்

காசற்ற போதிலும் கவலையின்றி உலகில்

மாசற்ற வாழ்வுநாம் மகிழவுடன் வாழலாம்

நோயற்ற வாழ்க்கையே குறைவற்ற செல்வமாம்

சீருற்ற வாழ்க்கையின் சிறப்பியல்பைக் கெடுக்கும்

நல்ல உணவு உடை நாடிடுவோம் எல்லாம்

வல்ல இறைவனடி வணங்கிடுவோம் என்றும்

பொல்லாத நோய்களைப் போக்கிடுவோம் வாழ்வில்

அல்லல் கொடுத்துச் சுக ஆதாரத்தைக் கெடுக்கும்

இராகம் :- காபி தாளம் :- ஆதி

பல்லவி

என்னதான் சொன்னாரடி? - அவர்
சொன்னதெல்லாம் சொல்லடி தோழி

அனுபல்லவி

பன்னக பூஷணன் பாதிமதியணியன்
சென்னை நகரமதைச் சேரும் கபாலீஸ்வரன்

சரணம்

கணத்திலிங்கு வந்தென்னை கலந்திடுவேனென்றாரே
மணத்திரு நாளிதென்று மங்களமாய்ச் சொன்னாரே
குணத்திலென்னைப் பெரும் குன்றென மொழிந்தாரோ?
வணக்கமுடனேயுன்னை வாழத்து வேனடி தோழி

இராகம் :- தோடி தாளம் :- ஆதி

பல்லவி

போடி போடி என்று பொறுமை இழந்தேன் என்னை
மோடி செய்யலாகுமோ? தோழி

அனுபல்லவி

கூடிக் குலாவிடக் கபாலீஸ்வரனை இப்போ
ஓடி மயிலை சென்று தேடி அழைத்துவாடி

சரணம்

திங்கள் அனல் பொழிய தென்றல் கணை சொரிய
மங்களப் புதுமலர் மஞ்சம் எனை வருத்த
அங்கமெல்லாம் எரிய அல்லல்படுவதெல்லாம்
மங்கை நீ சொல்ல வேகமாக விரைந்தோடி

இராகம் :- ஹம்ஸாநந்தி தாளம் :- ரூபகம்

பல்லவி

இன்னுமிரக்கம் இல்லையோ அம்மா தாயே
மன்னுமயிலை தன்னில் வாழ்ந்து
மின்னும் கற்பக வல்லி என்மீதில்

அனுபல்லவி

நின்னுடைய நற்பொன்னின் பாதம்
சென்னியில் வைத்தே மண்ணி நாடினேன்

சரணம்

உந்திருப்பதம் உறுதுணையென
உலகினில் தினம் உனை நாடி
வந்திருந்துந்தன் வாசலில் நின்று
வணங்குமெனை மறந்தாயோ?
செந்திருவே நீ ஜெயமருளிநற்
செயல் புரிந்திட அருளாயோ
உந்திருவடிதனையன்றி இந்த
உலகினில் வேறுகதியுண்டோ

# அன்புதான் தெய்வமெடா

இராகம் :- பீம்பிளாஸ்      தாளம் :- ஆதி

பல்லவி

அன்புதான் தெய்வமெடா - தோழா
அஹிம்ஸையே தர்மமடா - தோழா

அனுபல்லவி

பண்புகள் நிறைந்த அன்புதான் ஒன்று
மண்புகழ் வாழ்வை மாண்புறச் செய்யும் இந்த

சரணம்

பாசமாய் தோன்றும் பந்துமித்திரரிடம்
காதலாய் உறையும் காதலர் நெஞ்சினில்
பக்தியாய் விளங்கும் பரம குருவிடத்தில்
சக்தியால் உலகினைச் சமரசமாக்கிடும

# செந்தமிழ்க் கும்மி

1. நம்தமிழ் நாட்டின் செந்தமிழ்க் கும்மியை
நங்கையரே நீங்கள் அடியுங்கடி
அங்கைகள் வீசி அழகாகவே - தமிழ்
மங்கையரே நீங்கள் கொட்டுங்கடி

2. இனிமை தரும் நல்ல இசையுடனே எங்கும்
இன்பமிகும் படி கொட்டுங்கடி
கனிந்த தமிழில் கவிபாடி - நீங்கள்
குனிந்து கைகொட்டியடியுங்கடி

3. சுற்றிச் சுழன்றாடிக்கிட்டவே நின்று நீர்
மற்றவள் கையோடடியுங்கடி
பக்தியொடு தமிழ்ப் பாக்களைப் பாடியே
வெற்றி முழங்கிடக் கொட்டுங்கடி

4. பாடுங்கடி தமிழ்ப் பண்புகள் யாவையும்
கூடிப் புகழ்ந்தே யடியுங்கடி
ஆடுங்கடி நீங்கள் ஆனந்தமாகவே
நாடும் செழித்து நலமுறவே

# ஹேரலோ காஜேன என்ற மெட்டு

இராகம் :- ப்ருந்தாவனஸாரங்கா  தாளம் :- ஆதி

1. கல்வித் தெய்வம் அவள் தானடி தோழி
நல்வித்தை யாவும் தருவாளடி
பல்விதமாகநாம் பாடுவோம் வாணியின்
பாதம் பணிந்திடுவோம் வாருங்கடி

2. வெண்டாமரைதனில் வீற்றிருப்பாளடி
வீணாகானம் செய்வாளடி
எங்காயினும் தான் இந்நாதம் போலே
இச்செகத்தில் இல்லையடி உண்மையடி

3. கலைகள் யாவையும் காத்திடுவானடி
கலைமகளும் அவன் தானேயடி
கலைஞரின் உள்ளக்கமலம் தனிலே
காணலாம் நாம் அவளைப் பாடுங்கடி

# கோலாட்டம்

தன்னையறிந்தின்பமுற - வெண்ணிலாவே - ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே
நாதர்முடி மேலிருக்கும் - வெண்ணிலாவே - அங்கே
நானும் வரவேண்டுகிறேன் வெண்ணிலாவே

சச்சிதானந்தக் கடலுள் வெண்ணிலாவே - நானும்
தாழ்ந்து விடவேண்டுகிறேன் வெண்ணிலாவே
இராப்பகலில்லாவிடத்து - வெண்ணிலாவே - நானும்
இருக்கவெண்ணி வாழுகிறேன் வெண்ணிலாவே

ஆருமறியாமலிங்கே - வெண்ணிலாவே - அருள்
ஆளர் வருவாரோ சொல்வாய் வெண்ணிலாவே
அந்தசங்க சேவை செய்ய வெண்ணிலாவே எங்கள்
அய்யர் வருவாரோ சொல்வாய் வெண்ணிலாவே

வேதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே
வேதையுள்ளமேது சொல்வாய் வெண்ணிலாவே
குண்டலிப்பால் நின்றலங்கும் வெண்ணிலாவே அந்த
குண்டலிப்பால் வேண்டுகிறேன் வெண்ணிலாவே.

# குறத்திக்கும்மி

## மலைவளம்

சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மேயம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்வி மலையம்மேயம்மே
கொல்லிமலை எனக்கிளைய செல்லி மலையம்மேயம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழனி மலையம்மேயம்மே
ஆடும் அரவீனும் மணிகோடி வெயிலெறிக்குமம்மே
அம்புலியைக் கவளமென்றே தும்பவழி மறிக்குமம்மே
வேடுவர்கள் தினைவிதைக்க சாடுபுனம் தோறுமம்மே
விந்தையதில் குங்குமமும் சந்தனமும் நாறுமம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தை மலையம்மேயம்மே
இமயமலை என்னுடைய தமயன் மலையம்மேயம்மே
காடு தொறும் ஓடிவரை ஆடுகுதி பாயுமம்மே
காகமணுகா மலையில் மேக நிறை சாயுமம்மே
செல்லினங்கள் முழவுகொடே மயிலினங்கள் ஆடுமம்மே
திரிகூட மலையெங்கள் செல்வ மலையம்மே
வெருவி வரும் தினைப் பனத்தில் பெரும் ருதம் விலக்கியம்மே
வேங்கையராய் வெயில் மறைத்த பாங்குதனைக்
- குதித்தோயம்மே
அருளிலஞ்சி வேலர்தமக்கொரு பெண்ணைக்
- கொடுத்தோமம்மே
ஆதினத்து மலைகளெல்லாம் சீதனமாய்
- கொடுத்தோமம்மே
பாதிமதி ஆழ்மலையை துருவனுக்குக்
- கொடுத்தோமம்மே
பரமர் திரிகூடமலை பழைய மலையம்மே

# குலவளம்

1. ஆவின் கன்றை மடிமிசை வைத்தாண்புலி தாலாட்டும்
அக் கன்றிற்குப் பெண்புலி வந்தன்புடன் பாலூட்டும்
காவிற்கினி மாதவர் சொல்கலைகளெல்லாம் படிக்கும்
கார் வண்டுகள் இசை பாடக் கண்டு மயில் நடிக்கும்
மாவிளந்தேன் எடுத்துமந்தி மாமுனிவர்க்களிக்கும்
மலர்ப் பனிநீர் சிறகலள்ளி வரிக்குயில்கள் தெளிக்கும்
மாவலிசேர் பஞ்சவர்தூதேவன் சென்ற மூர்த்தி
மாலழகர் வளர் சோலை மலையெங்கள் மலையே

2. ஈசர்வளர் கயிலங்கிரி இமயமென்னும் கிரியும்
ஏர்பெருகும் நீலகிர்யிச நிடதகிரியும்
வீசுதங்கமேருகிரி விரமந்தர கிரியும்
வேங்கடமென்றுரைக்கு மொளி விளங்குஸப்தகிரியும்
தேசுலவும் விந்தயமலை திகழ்பொதிய மலையும்
சித்தர் வளர் சதுரமலை குற்றால மலையும்
ஆசுபெரும் கொல்லிமலை பேசமலையெல்லாம்
அழகர் மலைக்குள்ளடக்கமான மலையம்மே

3. மானைப்பிடியென்று மதயானை எட்டிப் பிடிக்கும்
மாரியெனத் தெரிந்து கையால் நீரபிழிந்து குடிக்கும்
ஏணம் புல்லைக் கசக்கி வழிமோனவர்க்குக் காட்டும்
எடுத்துடன் வால்கொடுத்துச் சிங்கம் அடுத்து வழிகாட்டும்
வேளலுக்குத் தகுந்தபடி சோணை மழை கொடுக்கும்
வீசுமலைப் பாடியெனவே மாசுணங்கள் படுக்கும்
மானைஅன்று தொடர்ந்து சென்று வடிகணையால்
- முடித்த
மாலகர் வளர் சோலை மலையெங்கள் மலையே

4. முகபடாம் போலுடுக்களெல்லாம் மிகவுமொளி
- துலங்கும்
முற்பிறையும் கோடெனவே பொற்புடனின் நிலங்கும்
மிகுமுனிவர் பாகரைப் போல் அகிலமெல்லாம் தோணும்
மேலரவ மணிப்ரபைகள் ஜாலெனவே காணும்
வகையுறுமும் மதமெனவே வரையரு விசொரியும்
வழுத்திடும் பேர்நாகமென்றே தழைத்தெவர்குந்
- தெரியும்
மகிதலத்தை ஓரடியால் மாபலிக்கால் அளந்த
மாலழகர் வளர்சோலை மலையெங்கள் மலையே

5. மன்றலந்தேன் குன்றவர்கள் மனையில்வந்து பாயும்
மண்டுமலைக் கலையினிற் கற்கண்டுகளாய்த் தோயும்
அன்றெடுத்துத் தினைமாவோடொன்று
- கலந்திடுவோம்
ஆறுமுக வேலவர்க்கு நேரும் விருந்திடுவோம்
சென்று புலிநகமெடுத்து நன்றணி போல் வனைவோம்
சிலந்தி முன்னூல் குரங்ககளிக்க அரந்தவர்க்குப்
- புனைவோம்
வன்திறல் சேர் அரக்கர்களை அன்றடர்த்த மூர்த்தி
மாலழகர்வளர் சோலை மலையெங்கள் மலையே

6. வரமிகுமானுகந்த எங்கள் வன்னியையன்புடனே
மாமணஞ் செய்திடும் பொழுது வள்ளிமலையுடனே
பரங்குன்றம் நயந்திமலை பழனியென்னும் மலையும்
பாமணஞ்சேர் சாமிமலை மா மயூரகிரியும்
அரவநதிச் சோலை மலையாகுமெங்கர் மலையும்
ஆறுமுகவேலவர்க்கு சீர்கொடுத்தோமம்மே
மருவுமெங்கள் குலத்துடைய வண்மைமிகுசெம்மை
வரிசையுடன் பகருகிறேன் வகையுடன் கேளம்மே

7. சாதியின்றிப் பெண்கள் கொடோம் சாதியின்றிக் - கொள்ளோம்
சரியுறவு பிடித்தவரை ஒரு பொழுதும் தள்ளோம்
போதகத்தின் முத்துடனே சாதிமுத்தும் - கோர்ப்போம்
பொறுக்கி வரும் முத்தையெல்லாம் அறிக்கலம் - சேர்ப்போம்
காது குத்திப் பெண்களுக்குக் கலன் அணியச் - செய்வோம்
ஃ.ஞ்சமுன்தாள் நூல் எடுத்து !மிஞ்சுதுகில் நெய்வோம்
மாதவனைப் பரவியவள் மருகனையும் பணிவோம்
வளஞ் சிறந்ததெங்கள் குலம் தளஞ்சிறந்ததம்மே

# பின்னல் கோலாட்டம்

இராகம் :- ஹம்ஸவத்வனி தாளம் :- ஆதி

ஸா; நி பாகா ரிகரிஸ நீ நீ /
பா; நி ஸாரீ/ கபகரிஸா; //
ரிக ரிஸரீ; கபகரிகா; /.
பநிபக பா;/ கபஸநிஸா //.
ஸா; நி பகபநிபா; கரிஸரிப /
கா; ரிஸ நிபநி/ ஸரிகபநீ //.
ஸநிபகாபநீ பகரி ஸாரிகா /
நிபகரி ஸா ஸாநி/ பகரீ பகவநி //.

# கும்மி

வாசமலர் மாதுவளர் கோசல தேசமுற்றும்
மனுமுறை கண்ட மகிபன்
தசரதப்பேர் வாய்ந்த செங்கோலின் நிருபன்
வழிபட்டொருமான் கோட்டுமாமுனி
புரிபுத்திர காமேஷ்டி மாமக
மகிமையால் வந்த மகனே
தினகரன் தன் வம்ஸமணி திலகனே

ஸாதக குணம் கண்ட மாதவரின் ஆதரவில்
தம்பி சௌமித்ரி இளையால்
தொடரக்கை கோதண்டமே பக்கத்துணையால்
சதிமோசம் புரி தாடகையாதியர்
அதிகோரம் தரு கரதலதோள்வலி
தாக்கிப் புகழ்படைத்தவா
தவமுனிவர் சஞ்சலங்கள் துடைத்தவர்

கானகவழி நடந்து மோன மிதுலாபுரியின்
காட்சி விரும்பும் ஐயனே
கல்லைப் பெண்ணாகக் கண்டு மகிழ்ந்த ஐயனே
கனவில் வளைத்து ராஜ சிகாமணி
ஜனகன் தவத்து மாமகளாகிய
கன்னி சீதையை மணந்தாய்
சிவராமன் தன் கருத்தில் புகழச் சிறந்தாய்

# பின்னல்

இராகம் :- ஹிந்தோளம்

ஸநித மகஸ மகம தா, /

நிதம கஸக ஸதநி ஸா, //

ஸநிஸ மா, தகம தா, /

நிமத நீ, ஸதநி ஸா, //

ஸக்நி ஸ்தநி மதக மஸக //

நிஸட கந்த மதந் ஸா, //

ஸ்க்ஸ் நிநீ நிஸ்நி ததா /

மந்த மகா ஸமக மா //

ஸந்த மகஸ மகம தா,

நிதம கஸக ஸதநி ஸா,

ஸநிஸ மா;; தகம தா;

நிமத நீ; ஷதநி ஸா;

ஸ்க்நீ ஸதநி மதக மஸக

நிஸம கநித மதநி ஸா;

ஸ்க்ஸ நிநீ நிஸ்கி ததா

மநித மக ஸக மா

## கர்பர்

ஜோனே ஸகிபெலோ ஜமுனாதடபர
நடவர நாசே யாமரே

1. ஏனே பக்லே கேர் குல நாசே
கேர்குல நீ கோபாலன நாசே
நாசே த்ரிபுவன தா; மரே

2. ஜமுனா நீ ஜன லஹரி நாசே
வளமது வளநீ குஞ்சன நாசே
கஸ்கரியே கனஸ்யாமரே
ஸாம்ய ஸுந்தர வேணு நாசே
அவநஸார்ந்தேலனமா நாசே
நந்த சிஷஏரனே நாமரே

## பின்னல்

1. நகலு கோபிகா க்ருஷ்ணா நந்தநோபவான்
அகிலஹேி நாம் க்ருஷ்ணா அந்தராத்மத்ருக்
விக்னஸார்த்திதோ க்ருஷ்ணா விஸ்வகுப்தயே
மகவுதேயிநாம் க்ருஷ்ணா ஸாத்வதாம்குலே

2. தவகதாம்ருதம் க்ருஷ்ணா தய்தஜீவனம்
கனிபிரீடிதம் க்ருஷ்ணா கல்மஹாபஹம்
மரவண்மங்களம் க்ருஷ்ணா ஸ்ரீமதாதிதம்
புவிப்ருணந்திதே க்ருஷ்ணா பூரிதாஜன

3. ப்ரஹரிதம்பாய க்ருஷ்ணா த்யானமங்களம்
ரஹஸிஸம் விதோ க்ருஷ்ணா யாஹருதிச்ப்ருசா
குஹகநோமந க்ருஷ்ணா ஷேபயந்தி வழி

## கைகொட்டுக்களி

மாநிநி மாரடி கூப்பும் பாமினிமார் நிங்ஙள்
ஸாத்ரம் ரவிச்சீடேணம் ஸோதரி சரிதம்
நம்முடேநகரே வாழும் தன்யநாம் சன்யாசி
கன்யநோடு பரமார்த்தம் சொந்நா நின்னு தன்னே
பிஷாவல்ல மல்லநேதரே மீமசேனன் தண்டே
பேராதரன் ஞானென்னநிக மாதவனதிஞ்ஞு
முல்லபாணன் கொல்லுமென்னை காந்தர்வலிவாஹி
இல்பொன்தன்னெ செய்கயென்னு நிர்ப்பாதிக்கு மூலம்
பாலயும் விவசாயாயி என்னே நினைக்குன்னு
பாண்டவனும் பாஹரியை சிந்திக்குன்னு வல்லோ
பாக ஆலனனும் ஸுரப் இந்தமசேஷவும்
மல்புரே வந்நிதங்சீரும் குதவநாரிமாகும்
இப்போன்தன்னே கூடிக்கேணப்போதிப்பித்த
- நியஞாண்

தாதவோடும் மாதாவோடும் கூடமாகம் வண்ணம்

# ஸீதாஸ்வயம்வரம்

1. வையக்ததோன் மன்னன் ஜனகன் - தர்பார்
மையம் வந்துரைத்தான் அனகன் - இந்த
முடிம்தினிற் பரமேசுரன் கொடிசூடிய கனவில்லையே
வின்வீர் கனி கொள்வீர்

2. இலங்கை மாநகர் வேந்தன் - எழுந்
திதோ விண்டேனெனருள் காந்தன் - அவன்
வலுவத்தனை முழுபத்தியும் தலைகுப் புறநிலை
- தப்பியே
வீழ்ந்தான் மன்னன் தாழ்ந்தான்

3. அங்கமா தேசத்துக் குருங்கி - வந்து
எங்கே பார்ப்போ மென்று நெருங்கி - இன்று
சகுணம் படுபொல்லாதது தினமும் மிகப் போதாதது
என்றான் உடன் சென்றான்

4. விதர்ப்ப ராஜன் அவ்வில்லையே - பார்த்து
எதர்க்கென்றானிந்தத் தொல்லையே - ஆனால்
தொடும்போமென அருகே வந்து நடும்போமெனத்
- தடுமாறியே
படுத்தான் வில்லை விடுத்தான்

5. கலிங்கதேசத்துக் கனகன் - கண்டு
குலுங்கினான் மெத்த அனகன் - வெறுங்
கருமீசையும் பிடிதடியும் சிறுமாதருக்கிசையாதன்
ஏங்கினான் பின்னே வாங்கினான்

6. கோதண்ட பாணியாம் ராமன் - என்றும்
தீதண்டா புண்ணியப் பீமன் - தன
தருகே நின்றே நின்ற முனிமாதவன்
விடையோதிடப் பெரியோர்களை
பணிந்தான் உடன் துணிந்தான்

7. கருணைச் சிவனையே போற்றி - வில்லைக்
காவடி போல் தோளிலேற்றி - கண்கள்
கூசப்பிரகாசத்தொளி வீசப்படு வேகத்துடன்
வில்லையே செய்தான் இல்லையே

8. ஒய்யார மாயங்கு தேவி - சீதை
பையப் பையவந்து மேவி - கண்டான்
ஜெகமெச்சிய தனுசைமிகலெகுவாகவே செய்த
தோழன் மணவாளன்

9. மண்டபத்துக்கப்பால் மேவி - தேவா
கந்தர்வர்பூமாரி தூவி - வெகு
அமரர் புகழ்ந்திட வாத்யங்கள் இமையோர்
- செவியடைக்கத் தொன
காண்பார் இன்பம் பூண்பார்

# கனம் கிருஷ்ணையர்

இராகம் :- கல்யாணி　　　　　தாளம் :- ஆதி

பல்லவி

கச்சிரங்கன் க்ருபையுனக்குச் சிதமாய்க் கிடைத்தது
இச்சைவர இன்னமலர் பட்சமேலட்சாந்திரமே

அனுபல்லவி

மச்சலி பந்தர் தானென்ன கொச்சிகுடகுதானென்ன
மற்ற மற்ற தேசங்களில் ராஜனென்ன போஜனென்ன
இச்சகத்திலும் மிகவும் மெச்சிப்புகழ் கொண்ட ஜெகன்
மோஹனங்கள் செய்யும் வெகு நாகரீகமானதுரை

சரணம்

பின்னை எண்ணாமல் கொடுக்கும்
மன்னன் இவர் தானடி
கன்னல் கதலி தழைக்கும்
நன்னலமாய் நஞ்சை புஞ்சை
அன்னதானமும் சொர்ணமும்
என்னவேணுமோ அதெல்லாம்
ஆதரித்துக் காப்பாற்றி
சீர்தரும் இவர் தானடி.

## தேசிய ஒற்றுமை (1) (பாடல் – 1)

இராகம் :- பிருந்தாவனஸாரங்க தாளம் :- ஆதி

பல்லவி

ஈழமணித் திருநாடு - அதை
இன்பத் தமிழிலே நீ போற்றியே பாடு

அனுபல்லவி

ஆழக்கடல் ஒலிக்கும் அள்ளி முத்தம் கொழிக்கும்
வேழம் மிகுந்திருக்கும் வேளாண்மையும் செழிக்கும்

சரணம்

ஒற்றுமைப் பண்பிருக்கும் ஓங்குயர் அன்பிருக்கும்
பொற்புது காட்சி எழில் பொலிவும் மிகுந்திருக்கும்
கற்றவர் போற்றுதற்கும் கவிதைகள் பாடுதற்கும்
அற்புத நாடு எங்கள் அணியிலங்கைத் தீவு.

## தேசிய ஒற்றுமை (2) (பாடல் – 2)

இராகம் :- ரஞ்ஜனி தாளம் :- ஆதி

பல்லவி

ஒற்றுமைப் பண்பதை நாட்டுவோம் - அன்பு
ஓங்கிடும் செய்கையில் காட்டுவோம் - நாம்

அனுபல்லவி

கற்றிடும் கல்வியை ஊக்குவோம் நாட்டில்
கற்பவை கசடறக் கற்றுத் தகைமை பெற

சரணம்

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கெனும்
அறிவுரை உணர்ந்து அனைவரும் சேருவோம்
திடம்பல கொண்டிலங்கைத் தீவு முன்னேறிட
தினமும் அவள் மைந்தர் மனவுறுதி கொண்டு

## தேசிய ஒற்றுமை (3) (பாடல் – 3)

இராகம் :- பெஹாக் தாளம் :- ஆதி

பல்லவி

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - என்றும்
ஓதி உணர்வோம் இந்த மேதினியில் நாமே

அனுபல்லவி

நன்று மிளிர்ந்து எங்கள் அன்புமணி இலங்கை
வென்று ஒளிர இந்த வியனுலகினில் நாமே

சரணம்

பஞ்சதந்திரக் கதை படித்துப் படித்தறிந்தோம்
பசுமரத்தாணி போலப் பதித்து விட்டோம் நெஞ்சில்
அஞ்ச வருவதேதும் அவனி தனிலே உண்டோ?
அன்பெனும் பண்பதால் அணியிலங்கை மைந்தர்

## தேசிய ஒற்றுமை (4) (பாடல் – 4)

இராகம் :- அமிர்தவர்ஷணி தாளம் :- ஆதி

பல்லவி

அன்னையைப் போற்றிடுவோம் - எங்கள்
இன்னுயிர் அணைய இனியமாதா இலங்கை

அனுபல்லவி

கன்னலும் செந்நெல்லும் களித்து வளரும் நாடு
வண்ணமலர்ச் சோலை வண்டுகள் பாடும் ஈழ

சரணம்

ஒற்றுமைப் பண்பின் உயரிய நாடு
கற்றவர் போற்றிடும் கவின் நிறை நாடு
புத்த பிரானடி போற்றிடும் நாடு
புவியிலெம் மீழப் புண்ணிய பூமியாம்

## நாட்டுப்பற்று (1) (பாடல் – 5)

இராகம் :- யமன் கல்யான் தாளம் :- ஆதி

பல்லவி

நாவலர் பிறந்த நன்னாடு - இந்த
நானில மீதிலெந்த நாடு ஈழத்திற்கீடு

அனுபல்லவி

பாவலர் ஆவலாய்ப் பாடிப் புகழ்நாடு
பாரினிலே இலங்கைப் பண்புத் திருநாடு

சரணம்

செந்தமிழ் சிங்களம் சேர்ந்து மிளிரும் நாடு
அந்தமில்லா அன்பும் அருளும் நிறைந்த நாடு
மந்த மாருதம் தவழ் மலைகள் மலிந்தநாடு
சுந்தர நதிவளம் சூழ்ந்திடும் பொன்னாடு

## நாட்டுப்பற்று (2) (பாடல் – 6)

இராகம் :- கௌரிமனோஹரி தாளம் :- ஆதி

பல்லவி

முத்துக்குவியலெல்லாம் கொத்துக் கொத்தாய் விளையும்
இத்திருப் பொன்னாடு - இலங்கை

அனுபல்லவி

கத்தும் குயிலிசைக்கும் காவில் மயில்களாடும்
தத்திவரும் நதியில் ரத்தினம் நடமாடும்

சரணம்

மஞ்சு தவழ்ந்துவரும் மலையருவி சொரியும்
அஞ்சுகங்கள் இருந்து கொஞ்சி விளையாடும்
பிஞ்சுப் பிறையழகும் பஞ்சுமுகில் அழகும்
மிஞ்சும் அருளழகும் மிகுந்து விளங்கும் நாடு

## நாட்டுப்பற்று (3) (பாடல் – 7)

இராகம் :- ஸிந்துபைரவி தாளம் :- ஆதி

பல்லவி

அன்பும் அகிம்ஸையும் அருளும் ஆற்றலும்
இன்புற இணையும் இலங்கை எம்தாய் நாடு

அனுபல்லவி

பண்புடன் பண்பாடும் பரதமும் விரதமும்
மண் புகழும் நல்ல மாந்தர் வாழும் நாடு

சரணம்

புத்தமதம் செழிக்கும் புனிதவள நாடு
இத்தரை மீதில் இந்து இலங்கும் திருநாடு
சத்திய யேசுமதம் சமயமாம் இஸ்லாமும்
நித்தியம் வளர்ந்தோங்கும் நீணிலங்கை நாடு

## நாட்டுப்பற்று (4) (பாடல் – 8)

இராகம் :- பாகேஸ்ரீ தாளம் :- ஆதி

பல்லவி

அலைகடல் சூழ்ந்திடும் அழகுத் திருநாடு
அணியிலங்கை எங்கள் அனைவர்க்கும் தாய்நாடு

அனுபல்லவி

மலையழகு மலியும் மாணிக்கமும் பொலியும்
கலையழகும் நிறைந்த கவினுடைப் பொன்னாடு

சரணம்

கண்டிய நடனமும் கலைநிறை பரதமும்
எண்டிசையோர் ஏத்தும் ஏழிசைப் பாடலும்
விண்தவழ் கோபுரமும் விளங்கிடும் சிற்பமும்
கண்டவர் களிப்புறும் காட்சி நிறையும் நாடு

## நாட்டுப்பற்று (5) (பாடல் – 9)

இராகம் :- திலங் தாளம் :- ஆதி

பல்லவி

எத்தனை இன்பமடா - தெய்வீகம்
இத்தரை மீதினில் இலங்குமிலங்கை நாட்டில்

அனுபல்லவி

புத்தரைப் போற்றியே புனிப் பஞ்சசீலம்
நித்தமும் காத்திடும் பக்திமிகும் நாட்டில்

சரணம்

கந்தன் குஞ்சரிவள்ளி கதிர்காமம் வந்துறை
அந்த நற்பாக்கிய அழகுத் திருநாடு
செந்தமிழ் சிங்களம் சேர்ந்து அன்பாய் வாழும்
சுந்தர நந்தவச் சுதந்திர இலங்கையில்

## நாட்டின் முன்னேற்றம் (1) (பாடல்–10)

இராகம் :- ஹம்ஸாநந்தி தாளம் :- ஆதி

பல்லவி

காடுகள் எல்லாம் கழனியடா - இலங்கை
நாடுகள் யாவும் போற்றிப் பாடுதடா ஈழக்

அனுபல்லவி

வீடுகள் தோறும் மங்களமரம் - இங்கு
விளங்கும் மொழி தமிழும் சிங்களமாம் வள

சரணம்

பச்சைவயல் எங்கும் பசுமை நிறைந்திருக்கும்
இச்சையாய் நெற் கதிர்கள் இசைந்து வளைந்தாடும்
அச்சமில்லாமலே அவனியிலே உழைத்து
இச்செகம் புகழ்ந்திட இலங்கி முன்னேறும் நாட்டில்

## நாட்டின் முன்னேற்றம் (2) (பாடல் – 11)

இராகம் :- தேஷ் தாளம் :- ஆதி

பல்லவி

தறி ஓசை கேட்குதம்மா - எங்கள்
தாய் நாட்டில் வாழ்ந்திடும் சேய்மானம் காத்திடும்

அனுபல்லவி

அறிவாலே உயர்ந்திடும் அருமறை வள்ளுவன்
இழை நக்கி நூல் நெருடும் இன்பத் தொழில் நெசவு

சரணம்

வேலையில்லையென்பதில் வேலையில்லையம்மா
ஆலைகள் ஊரிலெங்கும் ஆக்கிவிட்டாரம்மா
சேலைகள் உருவாகிச் சேமிப்பும் பணமாகி
மூலை முடுக்கிலெல்லாம் முழங்குதே நன் நெசவு

## நாட்டின் முன்னேற்றம் (3) (பாடல் – 12)

இராகம் :- செஞ்சுருட்டி தாளம் :- ஆதி

பல்லவி

நாடு முன்னேறிட நவீனயந்திரங்களை
நாம் பயனாக்கிடுவோம் - தோழா

அனுபல்லவி

பாடுபட்டால் வாழ்வில் பலனுண்டு ஆயினும்
தேடும் பழமையினும் நாடிப் புதுமை காண்போம்

சரணம்

ஏக்கர் நிலங்கள் உழ டிராக்டரும் உண்டு
ஆக்கம் நிறைந்த நல்ல ஊக்கமும் தருமே
தேக்கமுடன் கிணற்றில் தேங்கும் நீரை இறைக்க
ஊக்கமாய் இறைக்கும் இயந்திரமும் உண்டு

## நாட்டின் முன்னேற்றம் (4) (பாடல் – 13)

இராகம் :- பெஹாக் தாளம் :- ஆதி

பல்லவி

நெஞ்சினில் உரம் இருக்கு நேர்மை மிகும் தோளிருக்கு
பஞ்சம் இந்த நாட்டினிலே பறந்திடாதோ தம்பிமாரே

அனுபல்லவி

அஞ்சி அஞ்சி நீயும் ஏனோ அல்லல்பட்டலைகிறாய்
துஞ்சிடாமல் மேழி தன்னைத் தோளில் தூக்கிவையடா

சரணம்

நீர்வளமும் நிலவளமும் நிறைந்திருக்கிலங்கையில்
ஆர்வமுடன் நாமிளைஞர் ஏர்தனைத் தூக்குவோம்
ஊர்செழிக்க ஊண்கொழிக்க உழவுத்தொழில் செய்வோம்
சீர்பெருகும் சிறப்புடனே சிறந்து நாம் முன்னேறுவோம்

## திடசித்தம் (1) (பாடல் – 14)

இராகம் :- தாளம் :- ஆதி

பல்லவி

எத்தனை இடர் வரினும் எத்தனை துயர் வரினும்
சித்தம் திடங்கொண்டு நீ சிரித்திடுவாய் - மனமே

அனுபல்லவி

சத்தியம் அன்புபொறை சாந்தமும் கொண்டு வாழ்வில்
சித்திபெறவே நீயும் சிறந்து முன்னேறுகையில்

சரணம்

வாழ்க்கைப் படகு கால ஆழியில் செல்லும் போது
வீழ்ந்த இடர்ப் புயலும் வீசியடிப்பதுண்டு
நாள்த்தவறாது நீயும் சன்மனச் சாந்திபெற
வாழத்தித் திடசித்தமாம் வழியறிந்து வாழ்வாய்

## திடசித்தம் (2) (பாடல் – 15)

இராகம் :- பீம்பிளாஸ் தாளம் :- ஆதி

பல்லவி

நெஞ்சில் உறுதி கொண்டு நேர்மையுடன் உழைத்தால்
பஞ்சமிந்த நாட்டில் ஏதடா - தோழா

அனுபல்லவி

அஞ்சிடாமல் உழைப்போம் அழகுத் தொழில் புரிவோம்
கெஞ்சிடாமல் உலகில் குவித்திடுவோம் செல்வம்

சரணம்

திடசித்தம் கொண்டு வாழ்வில் திகழ்ந்து மிளிர்ந்து வாழ்வோம்
திண்மையுடனே என்றும் உண்மையுடன் உழைப்போம்
படமுடியாதிடர் எம் பாதையில் நின்ற போதும்
பாடுபட்டெங்கள் ஈழமாதா மனங்குளிர

## திடசித்தம் (3) (பாடல் – 16)

இராகம் :- கானடா தாளம் :- ரூபகம்

பல்லவி

சித்தம் கலங்காதே மனமே - இடர்
எத்தனை வந்தாலும் அத்தனைக்கும் உந்தன்

அனுபல்லவி

நித்தம் உனதன்பு நேர்மை மிகும் அந்த
புத்தம் புதுச்சேவை புரியும் போதிடர்வரின்

சரணம்

உள்ளத்தில் தூய்மையும் உண்மையும் ஓங்கிட
உன்னிலங்கை மாதா உள்ளம் குளிர்ந்திட
தெள்ளத் தெளிந்த நற்தேசப் பணி செய்வாய்
தேடிவருமின்னல் ஓடி மறைந்திடும்

## திடசித்தம் (4) (பாடல் – 17)

இராகம் :- அடாணா தாளம் :- ஆதி

பல்லவி

மனம் தளராதே மானிலமீதினில்
தினம் மலை போலே பெருமிடர் வந்தாலும்

அனுபல்லவி

வனவனல் போல பெருமிடர் வரினும்
நினதிடர் நீங்கிடும் நிலைகுலையாதே

சரணம்

திண்மை நிறைந்திடும் திடசித்தம் கொள்வாய்
உண்மையுடன் மன உறுதியும் கொண்டு
மண்ணில மீதினில் மாசறு கடமையில்
எண்ணிய கருமம் என்றும் நீ ஆற்றும் போது

## நற்பணி (பாடல் – 18)

இராகம் :- மலயமாருதம் தாளம் :- ஆதி

பல்லவி

அற்புத நாடிலங்கை அன்னை மனங்குளிர
நற்பணி செய்திடுவோம் - நாமே

அனுபல்லவி

பொற்புறு மீழவளம் பொலிவுறவே கல்விக்
கற்பனை வளம் நிறை கவிதைகள் பாடியே

சரணம்

மந்த மாருதம் தவழ் நந்தவனம் அமைப்போம்
கந்தம் கமழும் செந்நெல் கழனிகள் ஆக்குவோம்
வந்தனை செய் நெசவு வளங்களைப் பெருக்குவோம்
சிந்தனை சேரும் நல்ல சிறந்த கவிதை பாடி

## நற்பணி (பாடல் - 19)

இராகம் :- பீம்பிளாஸ் தாளம் :- ரூபகம்

### பல்லவி

நற்பணி செய்திடுவோம் - எங்கள்
நாடு நலம் பெறவே
அற்புதமாய் இலங்கை - அன்னை
அழகு பொலிந்திடவே
சிற்பமும் சித்திரமும் - வண்ணம்
சிறந்தநல் ஓவியமும்
கற்பனை சேரும் நல்ல - தூய
கவிதைகள் நாம் வடிப்போம்.

மேழியைத் தூக்கிடுவோம் - காடு
மேடுகள் யாவையுமே
நாழி நிறை நெல்லுக் - கழனி
நாமுமுண்டாக்கிடுவோம்
ஏழிசை பாடிடுவோம் - பரதம்
எழிலாய் ஆடிடுவோம்
வாழி என மாதா புகழை
வாழ்த்திப் பணிகள் செய்வோம்.

எங்களது இலங்கை - அன்னை
இதயம் குளிர்ந்திடவே
சிங்களமும் தமிழும் - கல்விச்
சிகரத்தில் ஏறி நிற்போம்
மங்களமே பொலிய - எங்கள்
மாதா மனம் மகிழ்ந்து
எங்கணும் பொலிய - இன்பம்
என்றாசி நல்குவளே.

## நற்பணி (பாடல் - 20)

இராகம் :- ஸாரமதி தாளம் :- ஆதி

பல்லவி

ஈழம் வளம் பெற நீயும் பணி செய்வாய்
ஆழ் உழும் கலப்பை தோளிளே தூக்கியே

அனுபல்லவி

வாழ வழிகாட்டும் வள நிறை எழில் மிகும்
மேழி செல்வம் கொழிக்க மேவும் வயல் செழிக்க

சரணம்

ஏரின் முனையதற்கு ஈடுண்டோ புவியினில்
பாரின்புறவே செய்யும் பண்பு விவசாயமே
காரின் வளம் பொழிய கழனியில் நெல் செழிக்க
சீரின் சிறப்பு மிகும் சிறந்த சேவையதை

## திடசித்தம்

இராகம் :- திலங் தாளம் :- ஆதி

பல்லவி

மலையே வந்தாலும் தலையே சுமந்திடு
நிலைகுலைந்தாலும் நேர்மை வழி நின்றிடு

அனுபல்லவி

அலை அலையாகவே அல்லல் வந்தலைத்தாலும்
கலையாது திடசித்தம் காத்திடுவாய் என்றும்

சரணம்

மனவுறுதியிருந்தால் மலையளவு இடரும்
தினையளவாகவே தெரிந்திடும் ஆதலிற்
கனவிலும் நனவிலும் உனது திடசித்தம்
காத்திடுவாய் துயர் போக்கிடும் வாழ்வினில்

## நாட்டுப்பற்று

இராகம் :- சாமா தாளம் :- ஆதி

பல்லவி

புத்தபிரானின் பொன்னடி போற்றிடும்
இத்திருநாடு இலங்கை புகழ்பாடு

அனுபல்லவி

சத்தியம் பொறை சாந்தமும் கொண்டு
இத்தரை மீதினில் இலங்கிடும் மூர்த்தி

சரணம்

அன்பும் அகிம்ஸையும் அருள் பஞ்சசீலமும்
இன்புறவே போற்றும் இனியநன் நாடு
நன்புனிதச் செம்மல் நல்லருள் நாடியே
மண்புகழும் நல்ல மாந்தர் வாழும் நாடு

## நாட்டுப்பற்று

இராகம் :- பெஹாக் தாளம் :- ஆதி

பல்லவி

எழில் மிகும் நாடு எம்மிலங்கைத் தீவு
பொழில் நிறையும் நல்ல தொழில் வள நாடு

அனுபல்லவி

விழியிரண்டும் கொள்ளாவியன்மிகு காட்சி நெறி
வழிமுறை செல்லு மாந்தர் மகிழ்வுறுமாட்சி மிகும்

சரணம்

தெய்வ வழிபாடு தேசாபிமானமுடன்
மெய்வருந்தியுழைக்கும் மேன்மைத் தொழிலுமுண்டு
செய்வதெல்லாம் செம்மை உய்வதெல்லாம் உண்மை
வையகமீதில் என்றும் வளமிகு நன்னாடு

# நாட்டுப்பற்று


## ராகமாலிகை

இராகம் :- அமிர்தவர்ஷணி தாளம் :- ஆதி
(திஸ்ரகதி)

சூழலும் உலகம் தனிலே என்றும்
மிளிரும் எங்களிலங்கையே
அழகுமலையும் நதியும் பொழிலும்
தவழுமெழில் துலங்கியே
கழனி வளமும் கனிகள் பெருகி
கமரும் மலர் குலுங்கியே
பழகுதமிழ் சிங்களமும் ஒளிரும்
பசுமை நிறைந்திலங்கியே

அலைகள் எழுந்து தரளம் குவிக்கும்
அன்னை இலங்கை பொற்பதம்
மலைகள் வளைந்து அருவி கொணர்ந்து
மணிகள் சூட்டும் நற்பதம்
கலைகள் யாவும் மலியும் பரதம்
கண்டிய நடனம் அற்புதம்
சிலைகள் வடிக்கும் சிற்பக் கலைஞர்
சித்திரம் பேசும் சொற்பதம்

வளைந்து வளைந்து நெற் கதிர்கள்
வயல்கள் தோறும் ஆடிடும்
விழைந்து குளைந்து நெல்மணிகள்
வியந்து தலை நாணிடும்
பறந்து பறந்து புல்லினங்கள்
பசுமை கண்டு பாடிடும்
சுரந்து சுரந்து பசுவினங்கள்
சுவைமிகும் பால் நல்கிடும்





Sivaranjanam Offset Printers
No. 183, Palaly Road, Kondavil. T.P: 021 222 6722